செந்தமிழ்

தொகுதி 82— ஜூன் 88 —பகுதி 2

— உள்ளே —

மலேசிய மேடை நாடகங்கள்—ஒரு விமர்சனம்

சோவியத் ரஷ்யாவின் குறிப்புகள்

ராஜ தரங்கிணி

மலையாள தூது நூல்கள்

சிங்கம்பட்டி ஜமீன் தூக்குத்துரை

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

ஆசிரியர் என்.எஸ். முத்துமலைச்சாமி, பி.ஏ.,பி.எல்.,

செந்தமிழ்

தொகுதி 82 — ஜூன் 88 — பகுதி 2

பொருளடக்கம் பக்கம்

1. நலிந்து வரும் உலகம் 1

2. மலேசிய மேடை நாடகங்கள்—ஒரு விமர்சனம் 3
—அ. மணிசேகரன், கோலாலம்பூர்.

3. கற்றது மறக்க (கவிதை) 15
—தம்பி சீனிவாசன், புதுடில்லி.

4. சோவியத் ரஷ்யாவைப் பற்றிய குறிப்புகள் —திரையன் 16

5. கடல் கடந்த கண்ணன் 20
(தொடர் கட்டுரை) —பி. ஆர். சுவாமி

6. பெண்ணின் சரிதம் (கவிதை) – திரையன் 27

7. ராஜ தரங்கிணி — டாக்டர். பழநி. அரங்கசாமி 28

8. நூல் மதிப்புரை —இரா. ஆனந்தி 34

9. மலையாள தூது நூல்களும் அவற்றின் அமைப்பும் 35
— டாக்டர். தா. ஈஸ்வரபிள்ளை

10. சிங்கம் பட்டி ஜமீன் தூக்குத்துரை 40

பொறுப்பாசிரியர் — டாக்டர் பழநி. அரங்கசாமி

நலிந்து வரும் உலகம்

அரசியல் வானத்தில் போர் மேகங்கள் சூழ்வதனால் உலகம் அழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது எனவே அதன் போக்கைத் தடை செய்து அமைதிப் பூங்காவின் பக்கமாக அதனைத் திருப்பிவிட வேண்டும் என்றெல்லாம் பேசுகிறார்கள். உலக அழிவிற்கு போர் மட்டும் காரணம் அல்ல. இயற்கையினை அழித்து, நீரின் தூய்மையைக் கெடுத்து நச்சுக் காற்றினைப் பரப்புவதாலும் மனித இனம் தன்னையே அழித்துக் கொள்ளுகிறது.

என்பது அறிவியலாரின் கருத்து.

உலகம் காலப் போக்கில் அழிந்து வருகிறது என்பதற்குரிய தலையாய காரணங்கள்

(i) ஒவ்வொரு ஆண்டும் காடுகளை அழிப்பது.

(ii) பாலைவனம் பெருகி வருவதைத் தடுக்க முடியாமை.

(iii) உயிர்களின் பாதுகாப்புக்கு இன்றியமையாத ஓசோன் வாயு அருகி வருதல்.

(iv) வாயுமண்டலத்தில் கரியமில வாயுவின் பெருக்கம்.

இத்தீமைகளின்றும் இம்மண்ணுலகைக் காப்பாற்ற வேண்டுமாயின், இன்றைய மனிதன் செய்ய வேண்டிய இன்றியமையாத பணிகள் சில உள்ளன.

(i) காடுகளை வளர்ப்பதோடு வளர்ந்து வரும் காடுகளை அழிக்காமலும் இருக்க வேண்டும்.

கரியமிலவாயு எனும் கெட்ட காற்றைத் தாம் உட்கொண்டு மனிதனுக்குத் தேவையான உயிர்க் காற்றை வெளிவிடும் அரும் பெரும் பணியைத் தாவரங்கள் செய்கின்றன. எனவே அவற்றை அழிப்பது என்பது மனிதன் தன்னையே அழித்துக் கொள்ளுதற்கு ஒப்பாகும்.

(ii) குடும்பக் கட்டுப்பாடு.

தீவிரமான மதக் கொள்கையினைப் பின்பற்றும் முஸ்லீம் நாடுகள் கூட திட்ட மிட்ட குடும்ப வாழ்கையினையும், அளவோடு பெறுவதனையும் ஒத்துக் கொண்டுள்ளன. பிறக்கும் உயிர் அனைத்தையும் காப்பதற்கு வழியில்லை என்றால், அளவுக்கு விஞ்சிய பிறப்பினைக் கைவிட்டு விடுதல் தான் அறிவுக்கு உகந்தது. உலகத்திலேயே ஐந்தில் ஒரு பகுதி ஆகிய நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கட் தொகையினைக் கொண்ட செஞ்சீன நாடு குடும்பக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக நடத்தி வருவதனாலே தான் உணவுப் பற்றாக்குறையினையும் சமாளித்து வருகிறது.

(iii) மண் வளப் பாதுகாப்பு.

வெள்ளத்தினாலும், மழையினாலும் சத்து நிறைந்த மேல் மண் அரித்துக் கொண்டு செல்லப் பட்டால், கீழே உள்ள கடினத்தரையில் பயிர் பச்சை நன்றாக வளராது. வேளாண் பெருமக்களுக்கு மேல்மண்ணின் முக்கியத்துவம் நன்கு தெரிந்திருக்கும்.

(vi) இராணுவச் செலவினைக் குறைப்பது.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கோடிக் கணக்கான ரூபாய்களை ராணுவத்திற்காக ஒதுக்கியுள்ளனர். இந்த ஆண்டு மட்டும் அமெரிக்கா தனது பட்டாளத்திற்காக ஒதுக்கியுள்ள தொகை 150 பிலியன் டாலர். அதாவது நூற்றி எண்பதாயிரம் கோடி ரூபாய்கள். ஜப்பானைப் போன்று யுத்த தளவாடங்களைச் செய்ய மாட்டோம் என்று உலக நாடுகள் உறுதி எடுத்துக் கொண்டால் இராணுவச் செலவின் ஒரு பகுதியிலிருந்தே பஞ்சத்தாலும் பட்டினியாலும் மாண்டு மடியும் மக்களைக் காப்பாற்றிவிட முடியும். வறுமையும் பிணியும் பற்றாக் குறையும் உள்ள நாடுகள் அனைத்தும் ஆப்பிரிக்க, தென் அமெரிக்கப் பெரு நிலப் பரப்பில் தான் உள்ளன. ஆசியாக் கண்டத்திலும் சிற்சில நாடுகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளன. பங்களா தேசம், இலங்கை போன்ற சிறு நாடுகள் உள் நாட்டுப் போரினால் நலிவடைந்து வருகின்றன. இந்தியாவும் இதற்கு விதி விலக்கல்ல. ஏதோ சமாளித்துக் கொண்டு வருகிறோம் என்பதன்றி, உணவு பெருக்கத்திலும் வாழ்க்கை வளத்திலும் பெருமைப் படத் தக்க நிலையில் இல்லை அண்டை நாடாகிய பாகிஸ்தான் உண்மையான நேசக்கரம் நீட்டுமாயின், பல கோடி ரூபாய்களை இந்தியாவும் மிச்சப்படுத்தி ஏனைய இன்றியமையாத திட்டங்களுக்குச் செலவிடலாம்

மலேசிய மேடை நாடகங்கள் - ஒரு விமர்சனம்

—அ. மணிசேகரன்
கோலாலம்பூர்

மலேசியாவில் இந்தியர்கள் குடியேறிய நாள் முதற்கொண்டு 1986 ம் ஆண்டு வரையில் நடந்தேறிய நாடகங்களைப் பற்றியும் அவற்றின் பொதுவான தன்மைகளைப் பற்றியும் மேலோட்டமாகக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

சில திருப்பங்கள் -:

1927-முதல் நாடகங்கள் நடந்து கொண்டுள்ளன. முதலில் கோலாலம்பூரில் தொடங்கிய நாடக முயற்சி பிறகு ஈப்போ, பினாங்கு நகரங்களுக்கும் சென்றது. மலேசியாவில் நாடகத்தை அரங்கேற்றியவர் அனைவருமே புதுமையைப் புகுத்தவேண்டும் என்று தான் நினைத்துள்ளார்கள். சிலர் இதில் வெற்றியும் கண்டுள்ளனர். 1954ம் ஆண்டிலே ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ் சொசைட்டி என்ற நாடக அமைப்பு 40க்குப் மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட முதல் பெரிய அளவிலான அமைப்பு ஆகும். மேலும் நாடகத்திற்கு பெரிய அளவிலான இசைக் குழுவை வைத்து நேரிடை இசையை (LIVE MUSIC) வழங்கிய அமைப்பும் இதுவே. இதற்கு முன்பெல்லாம் ஆர்மோனியப் பெட்டியும் மிருதங்கமும் அணி செய்துள்ளது. அதுமட்டுமல்லாது 1954ம் ஆண்டுக்கு முன்னர் நாடகம் என்றாலே அது பொதுவாகவே சமூகத்தில் பாட்டாளி வர்க்கத்தினரின் ரசனையாக இருந்துவந்துள்ளது அதனை முற்றிலும் மாற்றி அனைவரையும் ஈர்த்த நாடகக் குழு இதுவென அறிகிறோம். இதுவே நாட்டிய நாடகங்களை அறிமுகம் செய்துவைத்த குழுவும் எனத் தெரிகிறது.

திரைப்படத்துறையில் ஒவ்வொரு தயாரிப்பாளருக்கும் இயக்குநர்க்கும் புகழ் வாய்ந்த ஒரு காலக்கட்டம் இருந்தது. அதாவது ஸ்ரீதர், கே.எஸ் கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணன்பஞ்சு, பீம்சிங், ஏ. பி, நாகராஜன், கே. பாலசந்தர். எஸ். பாலசந்தர் போன்றோருக்கென ஒவ்

வொரு காலமிருந்தது. அதுபோல் நாடகத் துறையில் அமரர் ஆழி அருள்தாசன் அவர்களுக்கும் காலகட்டம் இருந்துள்ளது அவரை மலேசிய தமிழ் நாடகத் தந்தை என்றே அழைக்கலாம். அவர் தயாரித்த 13 நாடகங்களிலும் ஏதாவது புதுமையைப் புகுத்த நினைத்துள்ளார். அவற்றுள் 1953 இல் அரங்கேறிய வெண்ணிலா நாடகம் காட்சியமைப்பிலும், நடிப்புத் துறையிலும், மேடையமைப்பிலும் நல்ல திருப்பங்களை ஏற்படுத்தியது. அதைவிட, எதிரிகளின் தீயசெயல்களினால் நாடகத் தயாரிப்பாளரை போலீஸ் விசாரணை வரை கொண்டு சென்ற முதல் நாடகமும் இதுவே. ஒரே மேடையை நிரந்தரமாக இரண்டு பாகங்களாகப் பிரித்து - ஒரு பக்கம் மாடி வீடும் மறுபக்கம் குடிசை வீடும் வைத்த அவற்றை மாற்றி காண்பித்து புதுமையை ஏற்படுத்திய நாடகம் ஆழியின் ஒரே குரல். (1966)

ஒரே காட்சியில் ஒரு சிறுவனும் சிறுமியும் தோன்றி, அவர்கள் இளைஞர்களாக மாறி, பின்னர் வாலிபர்களாக மாறுவது சினிமாவில் சாத்தியமாவது, நாடகத் துறையில் சிரமம். ஆனால் வாடாமலர் இந்தப் புதுண்மயை செய்துள்ளது (1964).

முதன் முதலில் மேடையில் அகண்ட திரையைப் போட்டு (ஓரங்களில் ஒட்டை இல்லாமல்) சாதனை ஏற்படுத்திய நாடகம் கடாரம். (1972). ஒரே நேரத்தில் வீட்டின் மாடியிலும் தரைப் பகுதியிலும் நடிகர்கள் நடித்ததைக் காட்டிய நாடகம் ஆழியின் ''உயிரோவியம்'' என்பதாகும். (1965)

மேடையை மூன்று காட்சிகளாகப் பிரித்து, தேவைப்பட்ட பகுதியை ஒளியின் வசதியினால் காண்பித்து அங்கே நடிகர்களை நடிக்கவைத்து புதுமை ஏற்படுத்திய நாடகம் விஜய சிங்கத்தின் ''இணைந்தகரங்கள்.'' இதுவும் முதல் முயற்சியே. (1973)

ஒரே நடிகர் இரட்டை வேடத்தில் நடிப்பது சினிமாவில் இயலும், நாடகத்தில் இயலாது. ஒரே உருவம் கொண்ட இருவர் - இரட்டை உருவங்களாக நடித்தது ''இணைந்த கரங்கள்'' என்ற நாடகத்தில் (1973)

வேடிக்கைதான் என்றாலும் உண்மையே. அலிகளை மேடையில் நடிக்க வைத்த முதல் நாடகம் ''தேவை ஒரு கதாநாயகி'' (1975).

ரசிகர்கள் கீழே உட்கார்ந்திருந்து நடிகர்கள் மேலே மேடையில் நடிப்பதை மேடை நாடகம் என்போம். ஆனால் நான்கு புறமும்

எழுப்பப்பட்ட படிகளில் ரசிகர்கள் அமர்ந்து, தரையில் நடிகர்கள் வழங்கிய நடிப்பைக் காண வைத்த நாடகம்" ஓர் இன்ஸ்பெக்டர் வந்தார்". ஒரு வேளை இது தமிழகத்திலும் கையாளப் பட்டிராத உத்தியாக இருக்குமோ எனத் தெரியவில்லை. கீழ்மட்ட நாடக ரசனையை நடு மட்டத்திற்குக் கொண்டு வந்தது ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ் சொசைட்டி என்பதாகும். அந்த நடு மட்டத்தை சமூகத்தின் மேல்மட்டத்திற்குக் கொண்டு வந்தது "ஓர் இன்ஸ்பெக்டர் வந்தார்" என்ற நாடகம். (1975)

மலேசியாவில் நடிக்கப்பட்டுப் பின்னர் தமிழகத்தில் திரைப்படமாக உருப் பெற்ற முதல் நாடகம் 'இரத்தப் பேய்' (1969). வெளிநாடு சென்று நாடகத்தைப் போட்ட முதல் உள்ளூர் குழு சோனா ரசிகரஞ்சனி-சியாமில் இது பவளக் கொடியை அரங்கேற்றியது (1948)

மலேசியக் கலைஞர்கள் தமிழகத்தில் போய் போட்ட முதல் நாடகங்கள் இரத்தப்பேய் (1967), கடாரம் (1974), மற்றும் உயிரோவியம் (1974).

மலேசிய நாட்டின் முதல் பிரதமரின் கதையை நாடகமாக்கியது மட்டுமல்லாமல் அவரை தலைமைத் தாங்க வைத்து நமது கலைஞர்கள் மலாய் மொழியில் நடித்த முதல் நாடகம் "மகுரி" (1962) ஆகும்.

முக்கூடற் பள்ளு என்பது மலேசியாவில் அரங்கேறிய முதல் நாட்டிய நாடகமாகும் (1956). கிழக்கு மலேசியாவில் அரங்கேறிய ஒரே நாடகம் "எழுத்தாளர் ஏமாளி" (1965)

மலேசியாவில் நாடகத்தைப் போட்ட முதல் பெண்மணி கங்கா நாயர். நாடகம்-மாயா (1963). மலேசியாவில் போடப்பட்ட முதல் கவிதை நாடகம் பாஞ்சாலியின் சபதம் (1982). மலேசியாவில் போடப்பட்ட முதல் சமய நாடகம் "அபிராமி மைந்தன்" என்பது (1986)

மலேசியக் கலைஞர்கள் எந்த வகையிலும் தமிழகக் கலைஞர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதைத் தமிழ் நாட்டில் போட்ட கடாரம், உயிரோவியம் போன்றவை நிரூபித்து விட்டன. சிவாஜி கணேசன், எம்.ஜி ஆர் கண்ணதாசன், மனோகர், சகஸ்ரநாமம், மேஜர் சுந்தரராஜ் முதலியோர் அந்த நாடகங்களைக் கண்டு வியந்து

பாராட்டியுள்ளனர். நமது கலைஞர்களோ ஓய்வு நேரத்தை ஒதுக்கி நாடகங்களைப் போடுகின்றனர். தமிழ் நாட்டவர்களைப் போல் முழு நேரத் தொழிலாகக் கொண்டார்கள் என்றால் கற்பனைக்கே எட்டாத அற்புதமான நிலையை உருவாக்கி விடுவார்கள் என்பது திண்ணம்.

நாடகக் கருத்தரங்கம்

நாடகம் நடத்தினால் மட்டும் போதாது நிறைய கருத்தரங்கத்தை நடத்தி நாடகத்துறையில் மேம்பாடு காணமுயல்வதும் அவசியமே.

மலேசியாவில் நாடகம் பற்றிய கருத்தரங்கம் நடைபெறுவது மிக மிக அபூர்வம் என்பதனை நாம் அறிவோம். 9-4-1933ல் மலாயன் சுகுண விலாச சமாஜின் ஏற்பாட்டில் தலைநகரில் இயங்கி வந்த 9 இந்திய அமைப்புக்கள் ஒன்று கூடி ஒரு பிரமாண்டமான நாடகக் கருத்தரங்கினை நடத்தினர். அதோடு 25-1-1987ல் மலேசியத மிழர் கலை மன்றத்தாரின் ஏற்பாட்டில் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் ஒரு நாடகக் கருத்தரங்கம் நடைபெற்றது. காலை நேரத்தில் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஜி. பெருமாள் தலைமையில் மன்றத்தின் ஜி.எஸ், மணியம் "நாடகக் கலையில் நலம் காப்பது அவசியமா?" என்ற தலைப்பில் கட்டுரையை சமர்ப்பித்தார். பிற்பகலில் சுகாதார துணையமைச்சர் மாண்புமிகு டத்தோ கு. பத்மநாபன் அவர்களின் அந்தரங்கச் செயலாளர் அ. மணிசேகரன் தலைமையில் மு. மணிவாசன் "வருங்காலங்களில் மலேசியாவில் தமிழ் மேடை நாடகங்கள் எப்படி அமைய வேண்டும்" என்ற தலைப்பில் கட்டுரையை சமர்ப்பித்தார். கருத்தரங்கம் நன்றாக இருந்தாலும் கூட, முறையான முன் ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் கூட்டம் கூடவில்லை வந்திருந்தவர்களில் பலர் நாட்டில் நாடகக் கலை எதிர்நோக்கும் பிரச்னைகள், அவற்றை போக்குவது எப்படி நாடகக் கலையில் புதுமைகளை புகுத்துவது எப்படி மலேசிய அளவில் ஒரு நாடகப் பேரவையை அமைப்பது - இது போன்ற விஷயங்களில் உணர்ச்சிகளைக் கொட்டினர். வந்திருந்த 50 பேர்களில் 7 பேர்களைக் கொண்ட ஒரு தற்காலிகக் குழு நியமிக்கப்பட்டது.

நாடகம் விளைவித்த பயன்கள்

சிரமம் ஏற்று செய்யப்படுகின்ற எந்த நல்ல காரியமும் பலன் தராமல் போவது கிடையாது சிரமமே வடிவான நாடகத் துறையில்

புகுந்து சேவை செய்தோர் பலன்களை அடையாமல் போன தில்லை. ஓரளவாவது கல்வியைக் கற்றவர்கள் நாடகத்தின் கதாசிரியர்களாகவும் வசனகர்த்தாக்களாகவும் பணியாற்றினார்கள். இந்த நாட்டில் முறையான கல்வித் திட்டம் அறிமுகமாவதற்கு முன்பாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தேர்ச்சிபெற்றவர்கள்தான் ஆசிரியர் தொழிலை மேற் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இருந்ததில்லை. ஆனால் கோவில்களில் பண்டாரங்களாகவும் நாடகத்துறையில் நாடகாசிரியர்களாக இருந்தவர்களும், கற்ற ஒரு சிலரும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களாக உருமாறியுள்ளனர்.

தோட்டங்கள் திறக்கப் பட்டபோது அங்கு வந்து வேலை செய்த தொழிலாளர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு முறையான பள்ளிக் கூடங்கள் இருந்ததில்லை; அந்த வேளையில் அவர்களுக்கு ஆறுதலை வழங்கிய கல்வி நிலையங்களாக கோவில்களும் நாடகங்களும் திகழ்ந்தன. நாடகத்தைக் கண்ட தோட்ட தொழிலாளர்கள் ஓரளவு இலக்கண, இலக்கியத் தமிழை யும் தூய தமிழையும் கற்றுக் கொண்டார்கள். நாடகக் குழுக்கள் போனவுடன் அவர்களாக சிறு சிறு குட்டி நாடகங்களைப் போடு வார்கள். அவர்கள் பார்த்த நாடகத்தின் வசனங்களையும், அதில் உள்ள பாடல்களையும் மனப்பாடம் செய்து பாடுவார்கள். இதுதான் தொடக்க காலத்து நாடக மேடைக் கல்வி.

மேலும் அன்று நடைபெற்றவை புராண இதிகாச நாடகங்கள். அந்த மாதிரியான நாடகங்களின் வழியாக பல நீதிகளையும் சமய தத்துவங்களையும் நெறிமுறைகளையும் போதித்துள்ளார்கள். மலேசிய நாட்டின் மேடை நாடகங்கள் எந்த வேலையிலும் நாட்டுக்கு எதிர்ப்பான கீழறுப்பு போதனைகளையும் கீழறப்புச் சிந்தனை களையும் புகுத்தியது கிடையாது. ஆகவே, நாடகத்தின் வழியாக ஒழுக்கம் கற்பிக்கப்பட்டுள்ளது

பல நாடகங்களின் வழியாக தேசிய உணர்வுகளும் நாட்டுப் பற்றும் போதிக்கப்பட்டுள்ளன. தகவல் இலாகாவினர் அவசரகாலத்தில் போட்ட நாடகங்கள் அப்படியே.

எழுத்தில் வடிக்க முடியாத செய்திகளை மேடைப் பேச்சில் சொல்ல முடியாத பல விஷயங்களை நாம் நாடக மாந்தர்களின் மூலமாக தெரிந்து கொண்டு விடலாம். நாடகத்தைக் காண்போரும்

அற்றின் விளைவாக தங்கள் வாழ்க்கையில் பல பகுதிகளை மாற்றிக் கொண்டதுண்டு நமது கலை, கலாச்சாரம், மொழி முதலிய துறை களுக்கு நாடகம் நல்ல ஊக்கம் கொடுத்துள்ளது. நமது அருமை பெருமைகளை நாடகம் நினைவுபடுத்துகிறது.

பழங்காலங்களில் நாம் காணக்கிடைக்காத காட்சிகளை நாடகங்களின் வழியாகக் காண்கிறோம். இவை யாவுமே நமது உள்ளங்களில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. நம்மை அவை எங்கெங்கோ இட்டுச் செல்கின்றன.

முதலில் பொழுதுபோக்கிற்காகவே நாடகம்.

தமிழர் குடியேறிய மலேயா நாட்டில் மேடை நாடகங்களைத் தமிழர்கள் ஏன் ே ாட்டனர் என ஆராயும் போது பல காரணங்களை காணலாம். தமிழை நம்மவர்கள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்றையும் சேர்த்து முத்தமிழ் என்றே அழைக்கின்றனர். ஆகவே இந்தநாட்டில் தமிழ் வளரவேண்டும் எனக் கருதுகின்ற ஒருவர் இந்த மூன்றுதமிழையும் சரி சமமாக வளர்த்தால் தான் தமிழின் வளர்ச்சி சீராகவும் சிறப்பாகவும் இருக்கும். ஆனாலும் நாடகத்தை இந்த நாட்டில் போடத் தொடங்கிய காலக்கட்டத்தில் இந்த உயரிய நோக்கத்தை எவரும் கொண்டிருக்கவில்லை. மக்கள் ஒப்பந்தக் கூலி களாக இங்கேவந்த காலத்தில் சுகாதார குறைகளினால் சிலர் காலமானார்கள். சிலர் தமிழகம் திரும்பினார்கள் ஏறத்தாழ இந்த20ம்நூற் றாண்டின் முற்பகுதியில் வந்த இந்தியர்கள் இங்கேயே நிலையாகத் தங்க ஆரம்பித்து விட்டார்கள். அவ்வாறு அவர்கள் நிரந்தரமாகத் தங்கத் தொடங்கிய போது தான் கோவிலையும் கட்டினார்கள். பின்னர் மக்களின் வாழ்வில் அப்போது உழைத்த நேரம் போக ஓய்வு இருந்ததால் அந்த ஓய்வை கழிப்பதற்கு ஏதாவது ஒரு சாதனம் தேவைப் பட்டது. அப்போதெல்லாம் திரைப்படமோ, வானொலியோ பரவ வில்லை என்பதனால், பொழுதுபோக்கு என்றால் தங்களோடு கலந்து விட்ட நாடகக் கலை தான் தலைதூக்கியது அதனால் தான் இந்த நாட்டில் தொடக்க காலத்தில் நமது சமூகத்தில் பொழுது போக்கென் றால் கோலாட்டம், பொம்மலாட்டம், கும்மியாட்டம், ஆடுபுலியாட்டம். பொய்க்கால் குதிரை, கரக ஆட்டம், கிளித்தட்டு, சிலம்பம், வழுக்கு மரம் ஏறுதல், உரியடித்தல், சடுகுடு போன்ற நமது கலைகள் நிறைந்து இருந்தன. இப்போது இவை பற்றித் தெரியாத ஒரு சந்ததி உருவாகி வருகிறது.

மற்றும் நாடகம் என்பது தொடக்கத்தில் எல்லாம் கோவிலை ஒட்டியே அமைந்தது. அதிலும் தோட்டப்புறங்களில் நாடகம் இன்னும் சிறந்து விளங்கியது ஆகவே மக்களுக்குப் பொழுதுபோக்கை வழங்கவும், கோவில் விழாக்களை சிறப்பாகக் கொண்டாடவும் நாடகங்கள் நடத்தப்படலாயின. பலர் நாடகத்தைக் கண்கள் எனக்கருதி, அந்த அருமையான கலையை வளர்க்கவும் செய்தனர். இப்படித்தான் நாடகங்கள் இங்கே வளர்ந்தன.

தமிழகமும், மலேசியாவும்

மலேசிய மேடை நாடகங்களைப் பற்றி சிந்திக்க விழைவோர் அவற்றை மலேசியக் கண்ணோட்டத்தில் மட்டுமே காணவேண்டுமே யொழிய தமிழகக் கண்ணோட்டத்தின்படிக் காணக்கூடாது. நாடகக் கலைஞர்கள் இதனை நன்கு உணர்வார்கள். ஆனால் நாடக ரசிகர்கள் இன்னும்கூட; மலேசிய நாடகங்களைக் கண்டவுடன், அவற்றை தமிழகத்தின் நாடகங்களோடு ஒப்பிடுகின்றனர். மலேசிய நாடகங்கள் தமிழகத்தின் நாடகங்களின் அளவுக்கு தரமாக உள்ளனவா என ஒப்பிடுவதில் தவறில்லை ஆனால் இவை அவைபோல் இருந்தாக வேண்டும் என எதிர்பார்ப்பதுதான் தவறு அதற்காக மலேசியாவில் அந்த அளவுக்கு தரமான நாடகங்கள் முற்றிலும் நடைபெற்றதே இல்லை என்பது நமது வாதமில்லை. இருக்கின்றன ஆனால் அனைத்து நாடகங்களுமே அவ்வாறு அமையவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில் தான் நாம் சற்றுக் கவனமாக இருக்க வேண்டும் இதற்கு அடிப்படைக் காரணமே உண்டு.

தமிழ்நாட்டில் பிறந்தது தமிழ் நாடகக்கலை. நாடகங்கள் தமிழகத்தில் இருந்ததை சிலப்பதிகாரத்திலேயே நாம் கண்டுள்ளோம், இது தொன்று தொட்டு வளர்ந்த கலையாகும். ஆகவே, தமிழகத்தில் கலைஞர்களும் ரசிகர்களும் வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்ந்துள்ளனர். ஆதலால் நாடகக் கலை தமிழகத்தில் பல நுணுக்கங்களை அடைந்ததோடு, கலைஞர்களும் பண்பட்டதோடு, ரசிகர்களும் நல்ல ரசனையினை வளர்த்துள்ளனர் ஆகவே அங்கே நாடகம் என்பது நன்கு முற்றிப் பழுத்த துறையாகும். ஆனால் மலேசியாவில் தமிழ் மேடை நாடகம் என்பது புதிய இறக்குமதியாகும். இங்கே வந்து குடியேறியவர்கள் அனைவரும் கலைஞர்கள் அல்லர். கிட்டதட்ட 100 விழுக்காட்டினர் தொழிலாளர்களே! ஆகவே இந்தத் தொழிலாளிகள்

மத்தியில் இருந்து "எவராவது ஒருவர்" என்ற அடிப்படையில்தான் கலைஞர்கள் உருவாகியிருக்க வேண்டும். அதிலும் அக்கலைஞர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது தலை முறையினரிலிருந்து உருவாகியிருக்க வேண்டும். இங்கே நாடகம் தொடங்குவதற்கு அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்து சென்ற நாடகக் குழுக்களும். அந்த குழுக்களிலிருந்து விலகி இங்கேயே தங்கி விட்டவர்களும் காரணமாக இருந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நாடகத்திற்கான மேடை அமைப்புக்கள் தொன்று தொட்டு வந்துள்ளன. அங்கே ஒவ்வொரு ஊரிலும் கலை நிகழ்ச்சிகளுக்கான உரிய அரங்குகள் இன்னும் இருந்து வருகின்றன. நமது நாட்டில் நாடகத்தை நடத்துவதற்கென்று விஷேசமாக கட்டப் பட்ட மண்டபம் ஏதுமில்லை. வேண்டுமானால் தலைநகரின் பழைய நகர மண்டபத்தைக் கூறலாம். மற்றபடி தேவான் பகாசா டான் புஸ்தகா, சின் வூ மண்டபம், சாரணியர் மண்டபம், சினிமா தியேட்டர்கள் போன்ற நாடகத்திற்குப் பொருத்தமற்ற இடங் களையே நாம் நாடுவதுண்டு. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் நமக் கென்று நமது கலைகளுக்கென்று இன்னும்ஒரு மண்டபம் அமைய வில்லை.

அது மட்டுமல்ல, பொருளாதார ஏற்பாடுகள் செய்து தருவோரும் விளம்பரங்கள் கொடுப்போரும், நாடகத்திற்குத் தலைமை தாங்குவோரும் பெரும்பாலும் தலைநகரிலேயே இருப்பதனால், நமது நாடகங்கள் பெரும்பாலும் தலைநகரை விட்டு தாண்ட மறுக்கின்றன. ஒரு சில நாடகங்கள் எல்லையைத் தாண்டிச் சென்றதும் உண்டு. ஆனால் தமிழகத்திலோ நாடு முழுதும் நாடகத்திற்கான இந்த வசதிகள் இருக்கின்றன வட்டார நாடகக் குழுக்களும் அங்கே உள்ளன.

கலையைத் தொண்டாகவும் பிழைப்பாகவும் கொண்டுள்ள கூட்டம் தமிழ்நாடு முழுதும் இருக்கிறது. அதாவது மூலைக்கு மூலை வசனகர்த்தாக்களும் நடிகர்-நடிகைகளும் தயாரிப்பாளர்களும், திரைச் சீலை வரைவோரும் மேடை நிர்வாகிகளும், இசையமைப்பாளர்களும், பாடலாசிரியர்களும், ஓவியர்களும், இயக்குனர்களும், ஒப்பனை செய் வோரும், நாட்டியம் ஆடுவோரும் - இப்படியாக நாடகத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரும் இருக்கின்றனர். இங்கே இவர்களை மலேசியா முழுதும் தேடினாலும் கிடைப்பது அரிது.

தமிழகத்தில் தொழில் ரீதியில் நாடகக் கம்பெனிகள் இருக்கின்றன - இருக்கவும் முடியும். அங்கே கிராமப் புறத்தில் மக்கள் ஆதரித்தாலே போதுமானது. அங்குள்ள ஜனத்தொகையில் ஒரு 5 விழுக்காட்டினர் நாடகத்திற்கு ஆதரவு தந்தாலே போதும்-நாடகத்தை தொழிலாகக் கொண்டு பிழைப்பை நடத்தி விடலாம். ஆனால் நமது நாட்டில் உள்ள ஜனத்தொகைக்கு கிட்டத்தட்ட அனைத்து தமிழர்களும் ஆதரவு தந்தாலும் கூட நாடகத்தை தொழிலாகக் கொண்டு வாழ முடியுமா? என்பது சந்தேகம்தான் அங்கே ஒரு நாடகம் உருவாகும்போதே அதனை அங்கிருக்கின்ற 60க்கும் மேற்பட்ட சபாக்கள் ஒப்பந்தம் (புக்) செய்து விடுவார்கள். அதனால் நாடகம் தோல்வியைத் தழுவாது ஆனால் இங்கே ஒரு நாடகத்தை ஓர் இடத்தில் சில நாட்களுக்கு போட்டாலே சிறப்பாகும்.

தமிழ் நாட்டில் பணத்துக்காக நாடகத்தைப் போட்டு விடலாம் இங்கே பணத்துக்காக போட்டால் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

மலேசிய நாட்டில் நிபோங் திபால் ஆறுமுகம் நாடகக் குழு, கிருஷ்ணா நாடகக் குழு, தைப்பிங் ஆர்.பி.எஸ். மணியம் நாடகக் குழு போன்ற ஓரிரு முழு நேர நாடகக் குழுக்கள் இருந்தன. அவையும் இப்போது இல்லை; அவை போன்று வேறெதுவும் இல்லை.

ஆகவே, மலேசிய நாடகங்களை தமிழ் நாட்டு நாடகங்களோடு ஒப்பிடுவதோ, அல்லது இவை அவை போலவே அமையவேண்டும் என எதிர்பார்ப்பதோ தவிர்க்க வேண்டிய ஒன்று என்பதை இப்போது ஒத்துக் கொள்வோமாக. அப்படியானால் மலேசியாவில் மேடை நாடகங்களை எந்தக் கண்களைக் கொண்டு காண்பது? இந்த நாட்டில் நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களையும் வசதிகளையும் சூழ்நிலைகளையும் கொண்டு பார்க்குங்கால், நாடகத்துறை ஓரளவு சிறப்பாகவே வளர்ந்துள்ளது என தைரியமாகக் கூறலாம் அந்த வளர்ச்சியும் கூட கோலாலம்பூரையே ஒட்டிய வளர்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

பெரும்பாலான நாடகங்கள் கோலாலம்பூரில் உதயமாகி, கோலாலம்பூரில் நடத்தப்பட்டுப் பின்னர் வெளியூர்களில் போட்டால்தான் உண்டு. ஆனாலும் வெளி ஊர்களிலும் நாடகங்கள் நடந்துள்ளன. ஆயினும் அவை தலைநகரில் நடந்த நாடகங்களின் எண்ணிக்கையை எட்டிவிடாது. ஆகவே மலேசியாவில் மேடை நாடகங்கள் என்றால் அவை தலைநகரை ஒட்டியவை எனலாம். இந்த வளர்ச்சி நீடிக்குமா

அல்லது நிலைபெறுமா என்றால் - சந்தேகம்தான் என வேதனை யுடன் உள்ளத்தோடுதான் கூறவேண்டி இருக்கிறது

**கல்யாணம் பண்ணிப்பார் - வீட்டைக் கட்டிப்பார்
நாடகத்தைப் போட்டுப்பார்!**

சந்தன மரத்தைச் சுற்றிச் சர்ப்பங்கள் இருப்பதுபோல், அருமை யான கலைகளை ஒட்டித்தான் தொல்லைகளும் இருக்கும் போலும்! நாடகம் என்பது தொல்லைகள் நிறைந்த கலையாகும். அது ஆளை யே உருக்கி உருகுலைத்து விடக் கூடிய ஒரு கலை எனலாம். ஒருவர் நாடகம் என்பது "தாய் சேயைப் பெற்றெடுக்கும் துன்பத் திற்குச் சமம்'' என்றார். ஏன் இந்த உதாரணத்தைக் கூற வேண்டும் என எண்ணி, பிரசவ வேதனைப் பற்றி ஒரு மருத்துவரிடம் நான் விசாரித்தேன். மருத்துவரோ, உடல் வலிகளில் பிரசவ வேதனை தான் மிகக் கொடுமையானது என்றார். ஆனாலும் அத்தக் கொடிய வலிக்குப் பின்னர்தானே கண்களுக்குக் குளிர்ச்சியும் மனதுக்கு மகிழ்ச் சியும் தரக்கூடிய பிள்ளைப் பேறு கிடைக்கிறது. ஆகவே உவமை பெர்ருத்தமானது என உணர்ந்தேன்.

நாடகம் போடுவது அப்படி என்ன சிரமம்? என்று வாயளவில் கேட்டால், அது கடலுக்கு மேலுள்ள பனிக்கட்டி போலிருக்கும். நன்கு சிந்தித்துப் பார்த்தால் கடலுக்குக் கீழே மறைந்திருக்கும் பெரும் பகுதி கண்முன்னே நிற்கும். நாடகம் என்பது பல விதமான உழைப்புக்களைக் கொண்டது. அத்தனையும் ஒருவரே செய்து விட முடியாது. கதை- வசனம், நடிப்பு, ஒப்பனை, கலை, ஒளி, ஒலி காட்சியமைப்பு, திரைச்சீலை, இசை, பாடல், பின்னணிக் குரல், நடனம், ஓவியம், விளம்பரம், பண பலம். இப்படியாக இன்னும் பல அம்சங்களைக் கொண்டது. ஒவ்வொரு அம்சத்தையும் எவராவது ஒருவர் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு குணாதிசயம் கொண்டவராக இருப்பான் மனிதர்களில் இத்தனை நிறங்களையும் ஒன்றிணைத்து, கட்டிக் காதது, கட்டுக் கோப்போடு ஒரு நாடகத்தை அரங்கேற்ற வேண்டியுள்ளது. இதில் விபரீதம் என்ன வென்றால் நாடக வேலைகளை ஆரம்பித்தவுடன் புதுப் புது பிரச்சினைகள் புதுப்புது கோணத்தில் - எதிர்பாராத திசைகளில் இருந்து வந்து சேரும். மலை உச்சியில் சிறிய பனிக் கட்டியை உருட்டி விட்டால் அது கீழே உருள உருள மேலும் பனித் துளிகளைச் சேர்த்துக் கொண்டு பெரிய பனிக்குன்று அடிவாரத்தில் வந்து இடி

போல் விழும்! இதுவே நாடகத்தின் நிலை. இவை அனைத்தையும் தாங்கக் கூடிய இதயம் படைத்தோரே நாடகத் துறையில் அடியெடுத்துவைக்க முடியும். எத்தனையும் தாங்கியது ஒரு புறமிருக்க அவற்றை சமாளிப்பதற்குத் திறமையும் வேண்டும். அதனால்தானோ என்னவோ எவரோ ஒருவர்தான் இத்துறையை நாடுகின்றனர்.

நாடக மன்றத்தை அமைத்தவுடன் பதவிப் போராட்டம், மற்றும் பாத்திரப் போராட்டம் இருப்பதுண்டு. அல்லது நன்ருக வளர்ந்து வரும் போது நாடகக் கலைஞர்கள் வேலை விஷயமாக வேறு ஊர்களுக்கு மாற்றலாகிச் செல்வர். இந்த வகையில் பாதிக்கப்பட்டதுதான் அருமையான ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ் கொசைட்டி. பண நெருக்கடியினால் சிரமப்பட்டு கலைக்கப்பட்ட மன்றங்களும் உண்டு. வண்ணக்குமரி நாடக மன்றம் மற்றும் பூச்சோங் கலை மன்றம் இதற்கு இரையாகின. உட்பூசல்களினால் நாடகம் நடைபெறுவதில்லை. பால் மனம் என்ற நாடகம் இப்படித்தான் பாழானது இவை ஒரு சில உதாரணங்கள்தாம். நாடகங்களை அடிக்கடி நடத்த வேண்டும் என ஒரு நாடக மன்றம் அமையும். ஆனல் தாங்கிக் கொள்ள முடியாத துன்பங்களின் தொல்லையினால் அந்த மன்றங்கள் 'ஒன்றோடு', போதும் என்று கண்மூடிவிடும். இருந்தாலும் இவற்றை சமாளித்து எதிர்நீச்சல்போட்டு வளர்ந்த மன்றங்களையும் நாம் பாராட்டுதலோடு குறிப்பிட்டாக வேண்டும்.

1959ம் ஆண்டில் கருவாகி 1960ம் ஆண்டில் உருவான மலாயா கூட்டரசு தமிழர் கலை மன்றம் (1971ல் மலேசிய தமிழர் கலை மன்றம்) ஒரு அருமையான உதாரணமாகும். 13 நாடகங்களோடு இன்னும் இந்த மன்றம் பீடுநடைபோடுகிறது - வெற்றியோடு.

நமது சமூகத்தில் ஒருவன் எதிர்நோக்கும் இரண்டு பெரும் சிரமங்களைப் பழமொழியில் அடக்கியுள்ளார்கள். "கல்யாணம் பண்ணிப்பார்- வீட்டை கட்டிப்பார்". என்பதே அது. நாடகக் கலைஞர்களைக் கேட்டால் அவர்கள் "கல்யாணம் பண்ணிப்பார், - வீட்டைக் கட்டிப்பார் - நாடகத்தைப் போட்டுப் பார்" என்கின்றனர்.

அரங்கேறாத நாடகங்கள்

பெரும்பாலான நாடகங்கள் பல இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் இடையில்தான் அரங்கேறியுள்ளன. ஆனலும் இன்னல்கள்

தாங்க முடியாமல் அரங்கேறாமல் போன நாடகங்களும் உண்டு. கோலாலம்பூர் வளரும் கலைஞர்களின் "பால் மனம்" என்ற நாடகம் உட்பூசல்களினால் அரங்கேறாமல் போய்விட்டது. தினகரன் என்பவரின் முயற்சியினால் மேடையேறவிருந்த "வாழ்க்கைப் புயல்" என்ற நாடகமும் அசோகன் நாடக மன்றத்தார் திட்டம் போட்டிருந்த "வாள் முனை" என்ற நாடகமும் மலேசிய வானொலி கலைஞர்கள் திட்டம் போட்டிருந்த "பொழுது போகவில்லை" என்ற நாடகமும் அரங்கேற வில்லை. தமிழ்நாட்டின் பெரி சிவனடியானின் கைவண்ணத்தில் உருவான "அவளுக்காக" என்ற நாடகத்தை தமிழ் இளைஞர் மன்றத்தார் தலைநகரில் நடத்த நினைத்து கைவிட்டனர். 1975ம் ஆண்டில் லொக்யூ சன் பெங் ம.இ.கா. கிளைக்காக அமரர் சா. ஆ. அன்பானந்தன் "பட்டதாரி" என்ற தலைப்பில் நாடகத்தை உருவாக்கி ஒத்திகை வரைச் சென்று பின்னர் கைவிட்டுவிட்டார். இந்தப் பட்டியலுக்குள் வராதவை எத்துணையோ.

எது நல்ல நாடகம்?

நாட்டிலே சிறுகதை, கவிதை போன்ற படைப்பிலக்கியங்கள் நன்கு வளர்ந்துள்ளன என்பது அனைவரது கருத்தாகும். இவை வளர்ந்துள்ளதற்குக் காரணம் நிறைய வெளிவரும் பத்திரிகைகள் அவற்றில் எழுதும் எழுத்தாளர்கள் அவற்றைப் படிக்கும் தரமான வாசகர் கூட்டம் தரும் விமரிசனங்கள் பெரிதும் உதவுகின்றன. ஆனால் நாடகத்திற்கு நிலைமை அப்படியல்ல. சிறுகதைகள் பெறுகின்ற வாசகர் எண்ணிக்கையை நாடகங்கள் தொடுவதில்லை. சிறுகதைகள் கவிதைகள், அடிக்கடி வெளிவருகின்றன. ஆனால் நாடகங்களோ அத்தி பூத்தாற்போல் வெளிவருகின்றன. நாம் குறிப்பிட்ட சிறுகதை, கவிதை நாவல் போன்ற துறைகளில் பலர் நுழைந்து வெற்றி பெறலாம். ஆனால் நாடகத்துறைக்கு ஒரு சிலர் மட்டுமே செல்ல முடிகிறது. ஆதலால்தான் நாடகத்திற்குக் கிடைக்கக்கூடிய விமர்சனமும் பிற இலக்கிய கூறுகளுக்கு இருப்பதுபோல் இருப்பதில்லை. அதிலும் நாடகத்திற்கான விமர்சனத்திற்கு ஆழமான பார்வையும் கூர்மையான கண்ணோட்டமும் அதிக அவசியமாகிறது.

— தொடரும்

கற்றது மறக்க

தம்பி சீனிவாசன்
புது டில்லி.

யாரோ வெட்டிய பாதையிலே
எத்தனை தூரம் நடந்தாச்சு,
யாரோ கட்டிய குடியிருப்பில்
எத்தனை நேரம் இருந்தாச்சு,
யாரோ சமைத்த சோறெல்லாம்
எத்தனை கவளம் தின்னாச்சு,
யாரோ சுற்றும் பம்பரமாய்
இத்தனை காலம் இருந்தாச்சு!

எவரும் அறியா ஒரு பாதை,
எழுப்பி எனக்கோர் இடம்செய்தே,
தவறோ நலனோ தனியாகத்,
தடங்கள் பதிக்க முயல்வேனோ,

மற்றவர் சிந்தனை சொல்லெல்லாம்
மந்திர மாக்கி அலுத்தாச்சு,
மற்றவர் மதிக்கும் மதிப்புகளை
மாற்றும் உரைகல் பெறுவேனோ?

கற்றது மறக்கக் கற்பேனோ — என்
கனவை நனவாய்ச் செயலாக்கி,
வெற்றுரை விட்டுப் பொருள் ஏற்று
விதிகள் மாற்றும் வழிகாணக்,
கற்றது மறக்கக் கற்பேனோ — எனக்கு
உற்றது தெரிந்து நிற்பேனோ?

சோவியத் ரஷ்யாவைப் பற்றிய குறிப்புகள்

ரஷ்ய நாட்டின் முக்கியமான சில நகரங்களைப் பார்வை யிட்டு வந்த கே.எல். நந்தன் என்பார் நான்கு ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட ஒரு ஆங்கில நூலினின்றும் (UNTO THEE NEVA) எடுக்கப்பட்ட செய்திகள் கீழ்வருமாறு.

சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோ ஒரு ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. ஆண்டு முழுதும் நீர் ஓடிக் கொண்டிருக் கும் அந்த ஆற்றின் பெயரும் மஸ்கோவா என்பதாகும். ஆற்றின் இரு புறத்துக் கரைகளையும் செம்மைப் படுத்தி இரவு பகலாகப் போக்கு வரத்துக்குப் பயன் படுமாறு செய்துள்ளார்கள். முட்டை வடிவத்தில் கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் அந்நகரின் நீளம் அகலம் 109 கிலோமீட்டர். அகலமோ முப்பது கிலோமீட்டர் 1914-ஆம் ஆண்டு இருந்ததைவிட ஐந்து மடங்கு அதிகமாக இந்நகரம் இப்போது விரிவடைந்துள்ளது. பிற வெளிநாட்டுத் தலைநகர்களைப் போலன்றி இந்நகரம் முழுதும் அழகிய தோட்டங்களும், சோலை களும் வளர்ந்து இயற்கையான சூழ்நிலை காணப்படுகிறது.

மாஸ்கோவின் மக்கட்தொகை ஏறத்தாழ தொண்ணூறு லட்சம். இந்நகரின் லெனின் பெயரால் அமைந்துள்ள ஒரு குன்றின் மேலே 1775 இல் துவக்கப்பட்ட மாஸ்கோ பல்கலைக் கழகம் உலகத்தி லேயே மிகவும் பழைமையானது இதனையும் சேர்த்து சோவியத் நாட்டில் 26 லட்சம் ஆசிரியர்களைக் கொண்ட நாற்பதாயிரம் பல்கலைக் கழகங்கள் உள்ளன நாட்டின் வரவு செலவுத் திட்டங்களில் நூற்றுக்கு முப்பத்தி ஐந்து விழுக்காடு கல்விக் கென்று செலவிடப்படுகிறது.

செஞ்சதுக்கம், போல்ஷாய் தியேட்டர், கிரெம்ளின் கட்டிடம் ஆகிய மூன்று இடங்களும் மாஸ்கோவில் குறிப்பிடத் தக்கவை. புரட்சிக்கு (1917) முன்னர் ரஷ்யாவும் தொழில் மயமோ செல்வ வளமோ இல்லாத நாடு தான். ஆனால் அந்நாட்டு மக்களது உழைப் பும் முயற்சியும் அந்நாட்டை இன்று ஒரு வல்லரசாக மாற்றியுள்ளது. சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம். ரஷ்யாவில் உழவுத் தொழில்

பழைய பாட்டையிலேயே நடந்து வந்தது. நாட்டுப் புறங்களில் ஏர் கலப்பைகளினால் குதிரைகளைக் கொண்டு உழுதனர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இயந்திரக் கலப்பை கூட அங்கு கிடையாது. தங்கத்தை மாற்றுப் பொருளாகக் கொடுத்து அமெரிக்காவிலிருந்து போர்டு கம்பெனியாரின் டிராக்டரை வாங்கி வந்தனர். கீவ் எனு மிடத்தில் ஒரு இயந்திரப் பணிமனையில் அதனைப் பிரித்துப் பார்த்தனர். செயல் முறை விளக்கம் இல்லாமல் அதனை ரஷ்யாவில் செய்ய முடியவில்லை. அதனைக் கற்றுக் கொடுப்பதற்கு அமெரிக்க நிறுவனமோ கோடிக் கணக்கில் பணம் கேட்டது. ரஷ்யப் பொறி இயலர்களே அந்த எந்திரத்தைக் கவனமுடன் பிரித்து அதனுள்ளிருந்த 700 சிறு பாகங்களைப் போலவே தங்களது பணிமனையில் செய்து, ஒன்று சேர்த்து இயந்திரமாக்கி வெற்றிகரமாகச் செயல்பட வைத்தனர். அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள் ஐரோப்பிய நாடுகள் பல வற்றுக்கு டிராக்டரை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு முன்னேறி விட்டனர்.

உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அந் நாட்டில் பணி முடிந்து ஓய்வு பெற்ற முதியவரும் தம்மால் இயன்ற பணியினைச் செய்து கொண்டிருக்கக் காணலாம். எந்தப் பணியும் செய்ய முடியா மல் தண்டூன்றி நடக்கும் தள்ளாத காலத்தில் அரசினரே அவர்களைப் பேணி பராமரிக்கின்றனர். பொது மக்களின் வாழ்க்கையில் தேவை யற்ற ஆடம்பரத்தைக் காணமுடியாது. திருமணங்களில் கூட வரவேற்பின் பெயரால் வாணவேடிக்கைகளும், ஒளி விளக்கேற்றலும் அங்கு கிடையாது. ஐரோப்பிய, அமெரிக்க நகரங்களில் காணப்படு வது போன்று மின்னொளியில் அலங்காரமாகச் சித்தரிக்கப் பட்டு இரவெல்லாம் கண்சிமிட்டும் விளம்பரப் பலகைகளைப் பார்க்க இயலாது.

மாஸ்கோவுக்கு அடுத்த பெரிய நகரங்களில் ஒன்று லெனின் கிராடு இங்கு எந்த நேரமும் பகலாகவே இருக்கும். ஜூன் தொடங்கி ஆகஸ்டு வரை தெருவில் இரவு நேரங்களில் மின் விளக்கு தேவை இல்லை. இருளாக இருந்தால் தானே ஒளி வேண்டும்! வடதுருவத்தி ற்கு அண்மையில் இருப்பதால் ரஷ்யாவிலேயே இந்த நகரத்தில் மட்டுமே இந்த நிலைமை. வரலாற்றுப் புகழ் பெற்ற இந்நகரத்தை ரஷ்ய மன்னர் பீட்டர் கட்டச் செய்தார். நாட்டின் தலைநகரை மாஸ் கோவிலிருந்து இங்குமாற்றிக் கொள்ள எண்ணியிருந்தார். ரஷ்யநாடு பொது உடைமையரின் ஆளுகைக்கு மாறிய போது தங்களது தலை

வரது நினைவாக லெனின் கிராடு என்று இதன் பெயரை மாற்றி விட்டார்கள். இரண்டாவது உலகப் போரில் ஹிட்லரின் நாஜிப் படையினர் லெனின் கிராடு நகரை ஏறத்தாழ மூன்றாண்டுகள் நெருக்கி வளைத்து முற்றுகையிட்டனர். நகரின் மூன்று பக்கங்களிலும் யாரும் போகவோ வரவோ முடியாமல் நகரத்தைப் பட்டினி போட்டுக் கொன்று விடுவோம் என்று திட்டமிட்டார்கள். ஆயினும் போதிய போர்க்கருவிகளும் இன்றி உணவுப் பற்றாக்குறை, போதிய உடையின்மை ஆகிய இன்னல்களோடு சோவியத் படைகள் இட்லரின் முற்றுகையை முறியடித்து விட்டன. ஆண்டு முழுவதும் உறைந்து கிடக்கும் ஒரு ஏரியின் வழியாகவே வெளிப் போக்குவரத்தை வைத்துக் கொண்டு மக்களின் ஒத்துழைப்பையும் இணைத்து சோவியத் வீரர்கள் வெற்றி கண்டனர். மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் எந்த நாடும் எந்தச் சிக்கலையும் சமாளித்து விடலாம் என்பதற்கு இது ஒரு சான்று.

லெனின் கிராடு நகரில் உள்ள மிகப்பெரிய அய்சக் கதீட்ரல் பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அந்த நகரத்தையே பீட்டர் மன்னன் தனது மேற்பார்வையில் கட்டினார். பழம் பெருமை வாய்ந்த அய்சக் கோவிலில் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்டோர் நின்று வழிபடலாம். இதன் உச்சி கோபுரத்தில் உள்ள கும்பமும் சிலுவையும் ஏறத்தாழ நூறு கிலோ தங்கத்தால் ஆனவை.

சோவியத் நாட்டின் பல்வேறு குடியரசுகளின் ஒன்று உஸ்பெகிஸ்தான். இதன் தலை நகரம் சாமர்கண்ட். கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் இத்தலைநகரம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. கி. மு ஐந்தாம் நூற்றாண்டு எனலாம். பல்வேறு கலாச் சாரங்களை உள்ளடக்கிய இந்த தொன்மையான நகரத்தில் வெவ்வேறு காலங்களில் வரலாற்றில் இடம் பெற்றுள்ள பற்பல போர்கள் நடந்துள்ளன. கிரேக்கநாட்டு அலெக்சாந்தர் மங்கோலிய வீரன் செங்கிஸ்கான், நாடுகளையே கொள்ளையடித்த தைமூர், நாதிர்ஷா போன்ற மன்னரும் மாவீரரும் இந்த நகரத்தோடு தொடர்புடையவர்கள். 'இவ்வளவு அழகான நகரத்தை நான் இதுவரை கண்டதில்லையே' என்று அலெக்சாந்தர் வாயாரப் புகழ்ந்து மனமாரப் பாராட்டினான் என்பது வரலாறு. உலர்ந்த பழங்களான பேரீச்சையும் திராட்சையும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

வணிகப் பெருநகராக விளங்கும் தாஷ்கண்ட் மத்திய ஆசியாவுக்கு ஒரு வாயிற்படி போல் அமைந்துள்ளது. இதுவும் பழமையான நகரம். மிதமான தட்ப வெப்ப நிலை, சுறுசுறுப்பாக

மக்கள் தங்கள் பணிகளைச் செய்வதற் கேற்ற சூழ்நிலை. இந்த நகரத்தில் மறைந்த இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கு ஒரு நினைவுச் சின்னம் வைத்துள்ளனர். இந்திய - பாகிஸ்தான் போரில் நமது படைகள் அணு அணுவாக முன்னேறி பாகிஸ்தானின் லாகூரையே பிடிக்கின்ற அளவுக்கு வந்து விட்டனர் விருப்பம் இல்லாமலேயே ரஷ்யாவின் வற்புறுத்தலால் வென்ற இடங்களை யெல்லாம் விட்டு விடுவதாக கையொப்பமிட்டு மறுநாள் காலையில் அங்கேயே மரணமடைந்தார். அவருடைய சடலத்தைத் தோளிலே தூக்கி வந்தோருள் ரஷ்ய நாட்டு பிரஸ்னெவ் ஒருவராவர்.

தாஷ்கண்ட் நகரில் குழந்தைகளுக்கென்று நூல்கள் வெளியிடும் பதிப்பகம் ஒன்று உள்ளது. அங்கிருந்து உஸ்பெக் மொழியில் வருகின்ற இரண்டு குழந்தைப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் பத்து லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன. இவ்வளவுக்கும் உஸ்பெக் மொழி பேசுவோர் ஒன்றரைக் கோடி தான். எழுபது கோடி மக்கள் உள்ள இந்தியாவில் அதிகமாக விற்கப்படும் நாளிதழ் இன்னும் ஆறு லட்சத்தையே எட்டவில்லை யுனெஸ்கோவின் கணக்குப்படி ஆயிரம் பேருக்குப் பதினான்கு பேர் தான் நம் நாட்டில் பத்திரிகை படிக்கின்றனர்.

சோவியத் ரஷ்யாவே குளிர் நாடு என்றாலும், அந்த நாட்டின் மேற்கு எல்லையில் இருக்கும் சைபீரியா கடுங்குளிரான பகுதியாகும் அங்கிருக்கும் கடற்பகுதி வருடக்கணக்கில் உறைந்தே காணப்படும் அதன் வழியாகப் பின்லாந்து, லெனின்கிராடுக்குப் பயணம் செய்யும் கப்பல்களை ரஷ்யர்கள் அணு சக்தியினால் இயக்குகின்றனர். வழியில் எல்லாம் அவை பனிக்கட்டிகளை உடைத்துத் தமது பாதையினை உண்டு பண்ணிக் கொண்டே செல்லும் சக்தி வாய்ந்தவை ரஷ்யாவில் கடுங் குற்றவாளிகளையும் ஆயுட் கைதிகளையும் சைபீரியாவுக்கே அனுப்புகின்றனர் பனிப்புயல் வீசும் அந்தப் பகுதியிலிருந்து நெடுங் காலம் வாழ்ந்து மீண்டு திரும்பினால், அது மறு பிழைப்புத்தான். எனவே சைபீரியா வாழ்க்கைக்கு ஏற்ற இடமல்ல என்று தோன்றி-னாலும், ரஷ்ய அரசினர் அங்கும் பெட்ரோல், நிலக்கரி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கட்டுப்பாடும் ஒழுங்கும் நிறைந்த நாடாக அதை உருவாக்கியதில் ரஷ்யத் தலைவர்களுக்கு பெரும் பங்கு உண்டு. தனிமனித உரிமையும், சொத்துரிமையும் அந் நாட்டில் இல்லை என்றாலும், வளர்ந்து வரும் நாடாக இருந்து, இன்று அது வல்லரசாக மாறியுள்ள உண்மையை யாரும் மறுக்க முடியாது

— நிரையன்

கடல் கடந்த கண்ணன்

பி. ஆர். ஸ்வாமி.

கடல் கடந்தும் கண்ணன் திருப் பெயரை ஒலிக்கச் செய்யும் ஒரு மாபெரும் ஆன்மீக இயக்கத்தின் தோற்றத்துக்கு இவ்வாறு தான் நியுயார்க் நகரப் பூங்காவில் வித்திடப்பட்டது. வியப்போடும், ஆவலோடும் வேடிக்கை பார்த்து நின்ற மக்கட் கூட்டத்தின் பெரும் பகுதியினர் அன்று மாலையிலேயே பிரபுபாத சுவாமிகளின் இருக்-கைக்கே எழுந்தருளி விட்டனர். இருக்கையும் ராதாகிருஷ்ண கோ-விலும் ஒரே கட்டிடத்தில் தானே! அறைக் கதவைத் திறந்து கொண்டு சுவாமிகள் உள்ள நுழைந்ததும், வெளியில் நின்று கொண்-டிருந்த பற்பலர் மெதுவாக உள்ளே வந்து வழிபாடு நடக்குமிடத்தில் சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்த ஓவியங்களையும், படங்களையும் பார்க்கத் தொடங்கி விட்டனர். இந்து மதம் பற்றிய அனைத்துமே அவர்களுக்கு ஒரு புதுமை அல்லவா!

பூங்காவில் சொற் பொழிவு முடிந்ததும், களைத்துப் போய் வந்திருந்த சுவாமிகள் எதிர்பாரர்து வந்திருந்த மக்கட் கூட்டத்தை பார்த்து மகிழ்ந்தார். சற்று நேரத்தில் தனது இருக்கையில் அமர்ந்து தாளத்தைக் கையிலேந்தி கிருஷ்ண கானம் பொழியத் தொடங்கி விட்டார். கடவுள் தொண்டில் களைப்புக்கு இடம் இல்லை! கூடியி-ருந்த பொதுமக்களும் தங்களை அறியாமலே அமர்ந்து கான மழையில் நனைந்தார்கள். இசைப் பொழிவு முடிந்தது ''அனுதினமும் பூங்காவில் வழிபாடு நடக்கும் - அனைவரும் கலந்து கொள்ளலாம்,, என்ற அறி விப்போடு சுவாமிகள் இருக்கையை விட்டு எழுந்து விட்டார். ஒரு புதிய மெய்ஞ்ஞான உணர்வில் மூழ்கியிருந்த மக்கட் கூட்டமும் கலைய‌த் தொடங்கியது. சீடர் ஒருவர் ஒரு கோப்பை நிறைய சூடான பால் கொடுக்கிறார். அதனை அருந்தியதும் கூட்டத்திலேயே சாதா-ரணப் பாயினை விரித்து சற்று நேரம் அமர்ந்து பின் படுத்து நித்-திரை கொள்ளத் தொடங்கினார்.

அரே கிருஷ்ண இயக்கம் பற்றிய செய்திகள் காலப்போக்கில் பத்திரிகைகளிலும் வெளி வந்தன, போதைப் பொருளும் மதுவும் அரு

ந்திய சீடர்கள் அவற்றை மறந்து விட்டு இயக்கத்தின் அன்றாடப் பணிகளுக்கும், வழிபாட்டுக்கும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். தூய்மையான காய்கறி உணவும் குறித்த நேரத்தில் இலவசமாகவே அனைவருக்கும் வழங்கப்பட்டது ஆன்மீகம், மதம், வரலாறு பற்றி இந்தியாவிலிருந்து வந்திருந்த நூல்கள் மூன்ஹாலில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. இந்து மதம் அதன் தொன்மை பழக்க வழக்கங்கப் தத்துவங்கள் பற்றிய அனைத்து விளக்கங்களுக்கும் சீடர்கள் அந் நூல்களில் விரும்பியவற்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினர். பூங்கா வில் அன்றாடம் சுவாமிகளும் அவரது சீடரும் வழிபாடு செய்யும் போது எப்படிப்பாடினரோ அந்த ராகமும் மெட்டும்''லயமும் அந்த பகுதியிலிருந்த அமெரிக்கர்களைக் கவர்ந்து விட்டது.

ஒரு நாள் சுவாமிகளின் சீடர்களின் ஒருவரான ஆலன் கின்ஸ் பர்க் கிடார் எனும் வாத்தியத்தை கொண்டு காமச்சுவை கனியப் பாடும் ஒரு இளைஞர் குழுவினைக் கூட்டி வந்தார். அந்தக் குழுவினர் விரசமான காதல் பாட்டுக்களையே இசைத்தும் பாடியும் பழக்கப் பட்டவர்கள் ஒரு கட்டத்தில் அவர்களிடையே பேசும் போது சுவாமிகள் பாலுணர்வு பற்றி ''ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து வரும் பிணி'' என்றும் கண்ணனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து விடும் போது ஆண் - பெண் உறவு பற்றிய சிந்தனை ஓடோடி விடுகிறது என்றும் குறிப்பிட்டார். அடுத்த நாள் முதல் அந்த இளைஞர் குழு அந்தப் பக்கம் தலைகாட்ட வில்லை

கிடைத்ததை உண்டு. நினைத்ததைப் பாடி கண்டபடி அலைந்து போதையில் மயங்கும் ஹிப்பிகளிடையில் காமம் கலந்த காதலை வெறுத்து ஒதுக்கினால் அவர்களும் அரேகிருஷ்ண இயக் கத்தினைப் புறக்கணித்து விடுவர் என்பது சுவாமிகளுக்குத் தெரியும். குழந்தைப் பேறு என்னும் மங்கலமான செய்கையளவில் தான் பாலுணர்வு என்னும் பிரபுபாதரின் கொள்கை அமெரிக்கர்களுக்கு ஒத்துவராது என்று அமெரிக்க சீடர்களில் ஒருவரான உமாபதியும் கூறினார் 'அமெரிக்க இளைஞர்களைத் திருப்திப் படுத்துவதற்க்ாக உறுதியான கொள்கைப் பிடிப்பினை நான் விட்டுக் கொடுக்க முடியாது. என்று சுவாமிகளும் கூறி விட்டார்.

இயக்கத்தில் சேர்ந்திருந்த ஒரு அமெரிக்க வழக்கறிஞரே 'ஒரு நாள் மாலை பாலுணர்வு பற்றித் தாங்கள் என்னதான் கருதுகிறீர்

கள்' என்று கேட்டார் ''உடற்கலப்பு என்பது ஒருவன் தனது மனைவியுடன் நியதியோடும் வரன் முறையோடும் கொள்ளுவது தான்'' என்று பதிலிறுத்தார் சுவாமிகள் பிரபுபாதருடைய ஆன்மீகக் குருவும் அந்தக் கொள்கையைத் தான் கூறி வந்தார். ஆனால் தனிப்பட்ட முறையில் அவர் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார் என்பது வரலாறு.

'மனிதனிடம் இயல்பாகவே உணர்ச்சி பூர்வமாக வரும் பாலுணர்வைத் தடை செய்ய முடியாதே' — இது கோல்டூஸ் மித் கூறியது. 'எனவே தான் ஒவ்வொரு சமுதாயத்திலும் அதனை ஒழுங்குபடுத்தி திருமண ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளனர்.''

—இது சுவாமிகளின்பதில்.

தொடர்ந்து அவர் கூறினார். ''ஒருவன் ஒரு தார மணம் புரிந்து மனைவியுடன் தூய இல்லற வாழ்க்கை மேற் கொள்ள வேண்டும். விரக தாபத்தைத் தணித்துக் கொள்ளுதற்காகத் தான் மனைவி என்று எண்ணக் கூடாது. குழந்தைப் பேறு வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்று என்னும் எண்ணத்தில் மாதம் ஒரு முறையே கணவன் மனைவியுடன் உடற்கலப்பு கொள்ள வேண்டும்''

சுவாமிக்கு அருகில் கரதலங்களைக் கையிலேந்தி அமர்ந்திருந்த அயக்ரீவன் ஒரு நமட்டுச் சிரிப்புடன் ''மாதம் ஒரு முறையா? அப்படியானால் அதனை மறந்து விடுவதே மேல்'' என்றார்.

சுவாமிகளும் சிரித்துக் கொண்டே அதனை மறந்து விட்டு மேற் கொள்ளுவது இனியது தான். பெண்ணாசையோ உடலில் ஏற்படும் நமைச்சலைப் போன்றது. சொரியச் சொரிய சுகமாக இருக்கும். ஒரு கட்டத்தில் தோல் நசிந்து இரத்தம் வரும்போது எரிச்சலாக இருக்கும். அது போன்றே பாலுணர்வு மிகச் சிறந்த இன்பத்தைக் கொடுப்பதுதான் என்றாலும் அதுவே மனிதர்களை அடிமைப் படுத்தும் மாய வலையாகவும் இருக்கிறது என்று பதிலிறுத்தார்.

''ஆனாலும் பெண்ணாசையை அளவுக்கு மீறிக் கட்டுப் படுத்தக் கூடாது என்றும் பெண்ணாசையினால் தான் உலகத்தில் போர்கள் கூட......'' என்று வாக்கியத்தை கோல்டுஸ்மித் முடிக்கவில்லை. அதற்குள் சுவாமிகள் முந்திக் கொண்டு விட்டார்.

"மனிதன் மாமிச உணவை உட்கொண்டு வாழ்கின்ற காலம் வரையிலும் மண்ணாசையினால் போர் மட்டுமல்ல; முறைகேடான பாலுணர்வு வாழ்க்கையினையும் அவன் நடத்துவான். புலாலை ஒதுக்கி காய்கறி உணவை நாம் வற்புறுத்துவதற்குக் காரணமே மானுட வாழ்க்கை அருளோடும் அன்போடும் நடத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான்."

துறவி வாழ்க்கை மேற் கொள்ளுவோன் பெருந்தீனி தின்னக் கூடாது மிதமான உணவு உண்டு உடம்பினை மிதவை போல் இலேசாக வைத்துக் கொள்ள வேண்டும். நோய் அணுகா முறைகளில் அதுவும் இன்றியமையாத கொள்கை ஆகும். ஆயினும் உடம்புக்கு அடிப்படைத் தேவையான உணவினை பிரபுபாதர் ஒதுக்கியதில்லை. "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்பது திருமூலர் வாக்கு அல்லவா! ஓரளவு சுவையாகவும் உண்ண வேண்டும் என்று தமது சீடர்களின் உதவியோடு தாமே முன்னின்று சமைக்கவும் தொடங்கிவிடுவார் — சில சந்தர்ப்பங்களில்.

ஒரு நாள் இரவு 11 மணி. சுவாமிகள் தங்கியிருந்த இருக்கையின் சமையல் அறையில் விளக்கு எரிந்து கொண்டுள்ளது நெய்யில் பொரித் தெடுத்துப் பொன் வறுவலான குலாப் ஜாமூன்கள் சர்க்கரைப் பாகில் முக்குளித்து மிதக்கின்றன. அல்வாவும் சப்ஜியும் முன்னமேயே தட்டில் அமர்ந்துள்ளன. சாமோசா, பொங்கல், ஆப்பிள்சட்னி, செய்து முடித்த கையோடு பூரிகளைச் சுட்டு எடுத்தால் வேலை முடிந்து விடும். ஒவ்வொரு உணவும் செய்து முடிக்கப்பட்டவுடன் பிரமானந்தா அவற்றை எடுத்துக் கொண்டு சைதன்யரின் படத்துக்குக் கீழே படையலாக வைத்து விடுவார் அங்கு தயாரிக்கப்படும் இனிப்புகளில் குலாப் ஜாமூனுக்கு மட்டும் ஒரு தனி மதிப்பு, சில சமயங்களில் ஒரு பெரிய வாணலியில் நிறையப் பொரித்து எவர்சில்வர் அண்டாவில் கொட்டி ஜீனிப்பாகில் மிதக்க விட்டு கூடத்தில் வைத்து விடுவார்கள் — விரும்பியோர் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடட்டும் என்று! இந்த இனிப்பு உருண்டைகளுக்கு இஸ்கான் குண்டுகள் (Iskcon Bullets) என்று பெயரிட்டு அழைப்பது சீடர்களின் வழக்கம். இத்தகைய சிறப்பு விருந்து மாதம் ஒரு முறை நடக்கும். முன்னதாகவே அறிவித்து வெளியாரும் கலந்து கொண்டு வழிபாடு முடித்து உட்கொள்ளுவது உண்டு.

தூய்மையானதும், சுவையானதும் ஆகிய இத்தகு காய்கறிப் பிரசாதம் புதிய சீடர்களைக் கவர்ந்து இழுப்பதற்குரிய ஒரு வாய்ப்பாக

இருந்தது. பிரசாதம் என்றாலே கருணை என்பது பொருள். கண்ணன் கருணையைத்தான் நாம் உண்டு உயிர் வாழ்கிறோம் என்று சுவாமிகள் விளக்கம் கொடுப்பார். இசைப் பொழிவு செய்வதும் இனிப்பு விருந்து படைப்பதுமே கிருஷ்ணாய இயக்கத்தின் தலையாய தொண்டுகள் என்று எண்ணி விடக் கூடாது கலாச்சாரத்திலும், பழக்க வழக்கத்திலும், மதத்திலும் வேறுபட்ட அந்நிய மண்ணில் காலூன்றுவதற்காகச் செய்யப்பட்ட இன்றியமையாத முன்னேற்பாடுகள் என்று தான் கருத வேண்டும். இயக்கத்தை கட்டிக்காக்கும் நிலையான பணியைச் சுவாமிகள் சிந்திக்கத் தொடங்கினார்.

பாகவதம் பற்றியும், கண்ணனைப் பற்றியும் பிரபுபாதர் தமது 34 - ஆம் வயது முதற்கொண்டே கட்டுரைகள் எழுதத் தொடங்கினாலும். 1944 - ஆம் ஆண்டில் தான் யாருடைய உதவியும் இன்றி கல்கத்தாவில் கண்ணனைப் பற்றிய மெய்யுணர்வினைப் பரப்புதற்காகத் தனது சொந்த முயற்சியால் (Back to Godhead) எனும் ஆங்கிலமாத இதழைத் தொடங்கினார். அப்போதைய நிலையில் இதழின் அச்சடிப்புச் செலவுக்கும் தாள் வாங்குவதற்கும் மாதம் நானூறு ரூபாய் தேவைப்பட்டது. கல்கத்தாவில் இருந்த மருந்துக் கடையும் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்த காலம் அது. சைதன்யரின் கொள்கையினைப் பரப்புதற்கும், ஆன்மீகச் செய்திகளை வெளியிடுவதற்கும் அந்த இதழினையே அவர் நம்பியிருந்தார். வெளிநாடுகளுக்கு எல்லாம் அதனை அனுப்பி கண்ணன் புகழைப் பரப் திட்டமிட்டிருந்தார். பொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட காலங்களில் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கவில்லை. இந்தத் தொல்லையோடு 1959 - இல் பாகவதத்தையும் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

அமெரிக்க மண்ணில் சீடர்களின் உதவியால் தேவையான பொருள் வசதி கிடைக்கத் துவங்கியதும், நின்று போன அந்த மாத இதழைத் தனது சீடர்களை வைத்தே மீண்டும் தொடங்க எண்ணினார். கியூன்ஸ் என்னும் பகுதியில் பழைய அச்சகம் விலைக்கு வருவதாகக் கேள்வியுற்று கீர்த்தனானந்தா எனும் சீடருடன் சுவாமிகள் சென்றார். எதிர் பாராமல் இரண்டு அச்சடிக்கும் எந்திரங்கள் விலைக்கு வந்தன. மனித இனத்துக்குப் பயன் படும் ஆன்மீகத் தொண்டு என்று கேள்விப் பட்டதும் அச்சக உரிமையாளர் மிகவும் குறைந்த கட்டணமாக 250/ - டாலர்கள் பெற்றுக் கொண்டு எந்திரங்களைக் கொடுத்து விட்டார். கிருஷ்ணாய இயக்கத்துக்கு முதன் முதலாக ஒரு புதிய அச்சகம் கிடைத்து விட்டது.

அயக்ரீவனும், ராய ராமனும் பத்திரிகையினை வெளிக் கொணரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இவருள் அயக்ரீவன் ஒரு ஆங்கில ஆசிரியர். பிறிதொருவர் பத்திரிகையாளர்-கண்ணனின் புகழ் பரப்பும் மாத இதழ் சிறப்புற வெளிவந்ததில் ஒரு வியப்பு மில்லை அல்லவா! முதல் இதழைக் கொண்டு வந்ததை பாராட்டும் முறையால், அயக்ரீவனை சுவாமிகள் அழைத்து அதுவரை வெளி வந்திருந்த பாகவத மொழி பெயர்ப்பின் மூன்று பாகங்களை தனது கையொப்பம் இட்டுக் கொடுத்தார். ஒவ்வொரு மாதமும் தவறாமல் Back to God head வெளி வரவேண்டும் என்று அன்புக் கட்டளை யிட்டார். அதுவும் TIME வார இதழ் மாதிரி இதனையும் ஏராளமாக அச்சிட்டு வெளியிடவும் கேட்டுக் கொண்டார்.

முதல் இதழின் அட்டையில் ராதாகிருஷ்ண ஓவியம் ஜகன் னாதன் எனும் சீடர் வரைந்தது. அட்டையைப் புரட்டியதும் பெரிய எழுத்தில் பிரபுபாதருக்குப் பிடித்தமான வாசகங்கள் பெரிய எழுத்தில் ஆங்கிலத்தில் அச்சாகி இருந்தன.

ஆன்மீகமே ஒளி; அறிவின்மையே இருள்.
ஆன்மீகம் இருந்தால், இருள் மறைந்து விடும்.

அச்சடிக்கப்பட்ட இந்த மாத இதழ்கள் ராதாகிருஷ்ண கோவிலுக்கு வரும் பொதுமக்களுக்கும் சீடர்களும் வழங்கப் பட்டன. இசைப் பொழிவும், பாகவத விளக்கமுமாக இருந்த அரேகிருஷ்ண இயக்கம் மாத இதழின் உருவில் இலக்கியமுமாக வெளி வந்த உண்மை இயக்கத்தின் சீரான வளர்ச்சியைக் காட்டியது. மாத இதழின் மித மிருந்த பிரதிகளை கார்காமுனியும் பிரமாநந்தாவும் சைக்கிளில் எடுத் துச் சென்று முக்கியமான கடைகளில் வழங்கி விட்டு வந்தனர்.

இரண்டு மாதங்களே தங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அமெரிக்காவுக்கு வந்தவர் சுவாமிகள். ஆனால் இப்போதோ இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. தன்னந் தனியாய் வந்தார். இப்போதோ தொண்டர்களும், அன்பர்களும் நூற்றுக் கணக்கில் பெருகிவிட்டனர். தங்குவது எங்கே என்று தெரியாமலே வந்தார். இப்போதோ நியூயார்க் நகரிலேயே இரண்டாவது அவென்யூவில் 26-ஆம் எண் ணுள்ள கட்டிடத்தில் தொடங்கி நகரின் கீழ்ப்புறப் பகுதியில் ஒரு ராதாகிருஷ்ண ஆலயமும் சொற் பொழிவுக் கூடமும் உருவாக

விட்டது. எல்லாம் கண்ணனின் அருள் என்று தான் சொல்லிக் கொள்வார் சுவாமிகள்.

இயக்கத்தினைச் சார்ந்த பெண்-ஆண் தொண்டர்களில் எவராவது தமக்குள் உளமாற விரும்பினால் இந்துமத ஆச்சாரங்களின்படி அவர்களுக்குத் திருமணம் செய்து விடுவதும் உண்டு. இல்லறத்தை மீறிய துறவறத்தில் சுவாமிகளுக்கு முழு நம்பிக்கை இல்லை என்று தான் கொள்ள வேண்டும். இயக்கத்தில் சேர்ந்த பிறகு தம்பதிகளாகிய முகுந்தாவும் ஜானகியும் ஒரேகான் மாநிலத்தில் தங்கி விட்டு சான்பிரான்ஸிஸ்கோ போய்ச் சேர்ந்து விட்டனர். முகுந்தனுக்கு இந்திய இசையில் ஈடுபாடு உண்டு. இந்தத் தம்பதியினர் சுவாமிகளை சான்பிரான்ஸிஸ்கோவுக்கு வருமாறு அழைத்தனர். அங்கே ஆஷ்பரி பகுதியில் ஒரு சிறிய கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து ராதாகிருஷ்ண கோயிலையும் அமைத்து விட்டனர். சுவாமிகளின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தனது குரு நாதராகிய பக்தி சித்தாந்தர் கேட்டுக் கொண்டபடி இயக்கம் வளர்ந்து வருகிறது. என்பதில் சுவாமிகளுக்கு மன நிறைவு ஏற்பட்டது. ஆனால் நியூயார்க் சீடர்களோ பிரபுபாதர் தங்களை விட்டுச் செல்வதில் விருப்பம் இல்லாமல் இருந்தனர். கடுமையான குளிர் காலம் வேறு!

நியூயார்க் இருப்பதோ அமெரிக்காவின் கீழ்ப்பகுதிக் கடற்கரை. சான்பிரான்ஸிஸ்கோ மேற்குக் கடற்கரை. முகுந்தா எழுதியிருந்த இரண்டாவது கடிதத்தில் விமானத்துக்குரிய பயணச் சீட்டு வந்து விட்டது. இரண்டு ஆண்டுகள் நிலையாகத் தங்கி பணி புரிந்த நியூயார்க்கை விட்டு தொலைதூர மாநிலம் செல்ல முடிவு செய்து விட்டார். 'ஒரு நாட்டுக்கோ நகரத்துக்கோ நான் உரியவனில்லை; கிருஷ்ண பகவானுக்கே என்னை அர்ப்பணித்துக் கொண்ட நான் இந்த உலகத்துக்கே உரியவன்' என்று கூறிய சுவாமிகள் விமானப் பயணத்துக்கு ஆயத்தமாகி விட்டார்.

ஜனவரி மாதம் 16-ஆம் நாள் ஆண்டு 1967. வெளியில் நடுக்கும் குளிர். சில நூல்களையும் துணிமணிகளையும் உள்ளடக்கிய சிறு கைப்பெட்டியினை எடுத்துக் கொண்டு சுவாமிகள் புறப்பட்டு விட்டார். விமான நிலையம் செல்வதற்கு ஒரு சிறிய கார் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். குளிர்கால டு வீட் கோட் அணிந்து உருண்டையான தொப்பி ஒன்றையும் தலையில் மாட்டியிருந்தார்

சுவாமிகள். காலில் பூட்ஸ். கால நிலைக்கேற்ற உடை மாறுபாடு இருந்தாலும், கைகள் மணிமாலையை உருட்டிக் கொண்டிருந்தன. உதடுகள் ஹரேகிருஷ்ண பஜனையை மெல்லிய குரலில் இசைத்துக் கொண்டிருந்தன. முன் கூடத்தைக் கடந்து வெளியில் வந்து காரில் ஏறினார். வழியெல்லாம் வெளேரென்று உறைந்து கிடந்த பனிப் படலம். மரங்கள் எல்லாம் இலைகளை உதிர்த்து விட்டு குச்சி குச்சியாய் நின்று கொண்டிருந்தன. நகரின் பற்பல பகுதிகளைக் கடந்து கார் நியூயார்க் நகர விமான நிலையத்தை அடைந்தது.

(தொடரும்)

பெண்ணின் சரிதம்

(i) கருப்பையின் குருதி கழுவப்படாமல்
பிறந்த கணத்திலே பீறிட்டழுதேன்!
சுற்றி நின்ற பெண்டிர் குழாம்
பெண் மகவு பிறந்தமைக்குப்
பேதலித்த முனகலுடன்
என்னதோர் அழுகையும் இணைந்து விட்டது.

(ii) அழையாத விருந்தினர் போல்
அமைகிறதே பெண் வருகை!
பெண்ணாய்ப் பிறந்தாலே பின்புத்திதானே!
இறந்த காலத்தே பிறந்த பெண்ணெலாம்
பெண்ணுருவில் வந்தபெரும் பேய்களோ
அன்றி வரலாற்றின் சுமையெனவே
வந்து பின் வாழ்ந்து வரிசையாய்ப் போனவரோ!

ஆங்கிலம் - காவேரி
தமிழில் - நிரையன்

ராஜ தரங்கிணி

டாக்டர். பழநி. அரங்கசாமி
மதுரைப் பல்கலைக் கழகம்

தமிழிலும் வடமொழியிலும் உள்ள பல்வேறு காப்பியங்களை முழுமையான வரலாறாகக் கொள்ள முடியாதெனினும், அவை அங்கும் இங்குமாக சமகாலத்திய வரலாற்றுச் செய்திகளையும் உள்ளீடாக் கொண்டுள்ளன என்பதை மறுக்க முடியாது. வடமொழி இலக்கிய வரலாற்றை எழுதிய ஏ.பி. கீத் என்னும் மேலை நாட்டறிஞரின் கருத்தும் இதுவேயாகும். கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகளைப் போன்று வரலாறு ஒரு தனிப் பெருங்கலையாக வடமொழியிலோ தமிழிலோ தோற்றுவித்து வளர்க்கப்படவில்லை. நம்மனோரின் வரலாற்றுச் செய்திகளை இற்றைய நிலையில் இலக்கியத்திலிந்தே பிரித்து எடுக்க வேண்டியுள்ளது. செவிவழிச் செய்திகள், புராணிகச் செய்திகள் கற்பனை, வரலாறு என்று இனம் பிரித்துக் காணவேண்டிய நிலையில் அவையனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்தியாவின் உயர்தனிச் செம்மொழிகளாக கருதப்படும் தமிழிலும், வடமொழியிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ள காப்பியங்கள் அனைத்தும் வரலாற்றுக் காப்பியங்களே தவிர வரலாறுகள் அல்ல. இதிகாசங்கள் என்பனவற்றைப் பாரகாவியங்களாகவும், புராணங்களை புனிதநூல்களாகவும் கொள்ளலாம்.

தமிழில் உள்ள காப்பியங்களை ஐந்து சிறு காப்பியங்கள் என்றும் ஐந்து பெருங்காப்பியங்கள் என்றும் பிரிக்கிறோம். தமிழினைத் தாயாக உருவகித்து அரியணையேற்றிப் பார்க்கின்ற கவியோகி சுத்தாநந்த பாரதியாரும் ஐந்து காப்பியங்களை

காதொளிரும் குண்டலமும்
ஙகக்கு வளையாபதியும்
கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும்
மெல்லிய பூந்தாளிணைமேல் சிலம்பார் இன்ப

அணிமணியாக்கி அழகு பார்க்கிறார்.

தமிழினை விட வடமொழியில் காப்பியங்களின் எண்ணிக்கை மிகுதி. பதினொன்றாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரை வடமொழியில் காணப்படும் காப்பியங்கள் பதினொன்றாகும். விக்ரமாங்கதேவ சரிதம், பிருதிவிராஜ சரிதம், வசந்த விலாசம், மதுராவிஜயம், ராஜ தரங்கிணி ஆகிய புகழ்பெற்ற காப்பியங்கள் இவற்றுள் அடங்கும்.

ராஜதரங்கிணி கி.பி 12-ஆம் நூற்றாண்டில் வடமொழியில் எழுதப்பட்ட காப்பியமாகும். பண்டைக் கால முதல் இந்நூலாசியரின் காலம்வரை காஷ்மீரத்தை ஆண்ட பல்வேறுபட்ட மன்னர்களின் வரலாற்றைக் கதையாகத் தருவதே இந்நூலின் நோக்கம். படலம், காதை என்பது போல தரங்கம் என்பது காப்பியத்தின் சிறு பிரிவு ஆகும். கல்கணர் என்னும் பெரும்புலவரால் எழுதப்பட்ட இக் காப்பியம் எட்டு தரங்கங்களைக் கொண்டது.

இக்காப்பிய புலவரைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் இவரெழுதிய இந்நூலின்றே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது பிறகுறிப்புகள் யாண்டும் கிடைத்தில. ஒவ்வொரு தரங்கத்தின் இறுதியிலும் இவர் பாடலுடனேயே தமது பெயரையும் இணைத்துள்ளார். கம்பர் தன்னையாதரித்த சடையப்ப வள்ளலை ஆயிரத்துள் ஒருவனாகப் பொதிந்துள்ளார். தான் இராமகாதையுள் தனது பெயரை வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இக்காப்பிய நூல் கி.பி. 1148-க்குச் சமமான லௌகிக சகாப்தம் 24-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. கல்கணரின் தந்தை ஹர்ஷனின் அரசவையில் அமைச்சராக இருந்தவர் எனவே இந்நூல் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது தெளிவு கல்கணரின் தந்தையும், சிற்றப்பனும் பாரிகாச புரத்தில் வாழ்ந்தவர் என்று தெரிகிறது. இந்த ஊரைப்பற்றிய விளக்கக் குறிப்புகளும் தரங்கங்களினூடே காணப்படுவதால் இதுவே இக்காப்பியப் புலவரின் சொந்த ஊராக இருக்கலாம். இவர் சைவபிராமணர்; எனினும் புத்தமதத்தினைச் சிறப்பாகப் போற்றுவதால் குறுகிய மதக் கோட்பாடு இவரது கொள்கையாக இருந்ததில்லை எனலாம்.

கல்கணர் வாழ்ந்த காலத்தில் ஹர்ஷரது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பெருங்குழப்பம் நிகழ்ந்திருக்கிறது. ஏழாவது எட்டாவது

தரங்கங்களில் கூறப்படும் செய்திகள் இதற்குச் சான்றாக அமை-கின்றன. காஷ்மீரமும் அற்றை நாட்களில் ஹர்ஷரது அரசுக்குள் அடங்கிய பகுதியே தனது ஆட்சிக்காலத்தின் (கி. பி. 1089 — 1101) தொடக்கத்தில் மிக்க உதாரகுணத்துடன் விளங்கிய இப்பேரரசர் வட இந்தியப் பெருநிலத்தின் பெரும்பகுதிகளை வென்று தனது அரசி-னைக் காஷ்மீரம் வரை விரிவுபடுத்தினார். காலப்போக்கில் அரசர் கட்கேயுரிய தீய பழக்கங்களும் கொடுங்கோன்மையான செயல்களும் இவரிடமும் காணப்பட்டபோது உட்பூசல்களும் எதிர்ப்பும் எற்பட்டன. உக்கலர், சச்சலர் எனும் இருவரே அந்த வம்சாவழிப்போராட்டத் துக்குத் தலைமை தாங்கினர். அப்போது ஏற்பட்ட குழப்பத்திலும் போராட்டத்திலும் ஹர்ஷர் உயிரிழந்தார். மன்னரது மறைவு கல்கணரது குடும்பத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் கல்கணரது தந்தை அரச கருமங்களில் ஈடுபட்டுப் பெரும் பதவி வகித்தவர் அல்லவா! கல்கணர் எந்தப் பதவியிலும் இல்லை யென்றாலும், அரசுக்கும் வேண்டிய குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் மன்னரது வீழ்ச்சி அவரது சிந்தனையைக் கவர்ந்திருக் கிறது. தாம் வாழ்ந்த பகுதியாகிய காஷ்மீரத்தின் பண்டைய வரலாறு தொடங்கித் தாம் வாழ்ந்த காலம் வரை இருந்த அரச மரபுகளின் வரலாற்றை ஒரு காவியமாகவே புனைந்து விட்டார். அப்போது காஷ்மீரப் பகுதியில் வழக்காற்றில் இருந்த வடமொழியின் ஒரு பிரிவான 'ஷாரதா' எனும் கிளை மொழியில் இது எழுதப்பட்டுள்ளது. நெடுங்காலம் ஓலைச்சுவடியாகவே இருந்த இந்நூல் வெளி உலகுக்குத் தெரியாமலே வழக்கற்றுப் போயிருந்த ஒரு கிளை மொழியின் நூலாகவே இமயத்தடவரையில் ஏறத்தாழ அறுநூறு ஆண்டு காலம் கிடந்திருக்கிறது. இதனை அச்சேற்றி நூல் வடிவாக்கிப் பிறமொழி யிலும் கொண்டு வந்த பெருமை ஒரு ஐரோப்பியரைச் சாரும்.

இந்தியாவின் வங்கப் பகுதியில், அதிலும் கல்கத்தாவில் தான் ஐரோப்பியர்கள் தங்களது வணிகத் தலங்களை ஏற்படுத்தி சிறுகச்சிறுக முன்னேறி வாணிகத் தொடர்பினை ராணுவ ஆளுகையாக்கி அதன் பின்னரே கல்வி கலாச்சாரத் தொடர்பு ஏற்பட்டது என்பது வரலாறு. ஒவ்வொரு ஐரோப்பிய இனத்தினரும், குறிப்பாக பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் நிரந்தரமாகவும் சிறுகச்சிறுகவும் தங்களது ஆளுகைக்கு வழிவகுக்கத் தொடங்கிய போது தான் இந்தியக் குறுநில மன்னர்-களோடும் ஐரோப்பியர்களுக்குள்ளேயே ஒவ்வொரு இனம் பிற இனத் தோருடனுமாகப் போராட்டம் நிகழ்ந்தது. அப்போது இந்த நாட்டுக் குள் நுழைந்த கிளைவ், தூப்ளே போன்றோர் கொள்ளையடிக்கும்

நோக்கத்தோடு வந்தவர்கள். வரலாற்றுச் சின்னங்களின் தூய்மையைச்சிதைத்தவர்கள். இந்திய நாட்டின் தொன்மையினைப் பற்றியோ, இலக்கிய வளம் பற்றியோ அவர்களுக்கு எதும் தெரியாது. அதனைப் பற்றி அவர்கள் கவலைப்படவும் இல்லை சற்றுப் பிற்காலத்தில் இங்கு வந்த ஐரோப்பியர் பலர் இந்த நாடு அருங்கலைப் பெட்டகம் என்று உணர்ந்து ஓலைச் சுவடிகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் சேகரிக்கத் தொடங்கினர். மிகச்சிறந்த நீதி நூல்களையும், காப்பியங்களையும் மொழிபெயர்த்து லத்தீன். ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வெளியிட்டார். இவருள் கர்னல்மெக்கன்சி. எட்வின் ஆர்னால்டு வில்கின்ஸ் போன்றோரை மறக்க முடியாது. இந்திய நாட்டின் பல்வேறு கிராமப் பகுதிகளுக் கெல்லாம் சென்று ஏராளமான கையெழுத்துப் பிரதிகளையும், ஓலைச்சுவடிகளையும். செப்புப் படிமங்களையும் ஓவியங்களையும் சேகரித்து அவற்றைத் தன்னிடமே வைத்திருந்தவர் மெக்கன்சி. அவரது மறைவுக்குப் பின்னரே ஆங்கில அரசாங்கமே அவற்றை எல்லாம் மூட்டைகட்டி பிரிட்டிஷ் அருங்காட்சியகத்துக்கு (Museum) அனுப்பி விட்டது. நம் நாட்டு வரலாற்று அறிஞர்களே இந்தியாவைப் பற்றி ஆய்வு நிகழ்த்த இங்கிலாந்துக்குச் சென்று வர நேரிட்டது.

கிழக்கிந்திய கம்பெனியின் காலத்தில் கல்கத்தாவில் இருந்த மூர்கிராப்ட் என்பாரே ராஜ தரங்கிணியைக் கண்டெடுத்தவர். 1823-ஆம் ஆண்டு ஸ்ரீநகருக்குச் சென்றிருந்த போது அப்போது தேவநாகரி லிபியில் பெயர்க்கப்பட்டிருந்த அந்தப் பிரதி அவருக்குக் கிடைத்தது. எம் - டிரோயர் என்னும் பிரெஞ்சுக்காரர் அதனைத் தமது மொழியில் பெயர்த்தார். 1875 - ஆம் ஆண்டு காஷ்மீரப் பள்ளத்தாக்கைச் சுற்றிப் பார்த்து சுவடிகள் சேகரிக்க வந்த பியூலர் (Buhler) எனும் ஜெர்மானியர் கொடுத்த பிரதியே 1900 ஆம் ஆண்டு ஸ்டீயன் வெளியிட்டதாகும் பண்டித நேரு குடும்பத்துக்கு உறவுக்காரர் ஆர். எஸ். பண்டிட் 1935 - ஆம் ஆண்டு இந்நூலை ஆங்கிலத்தில் பாடலாகவே பெயர்த்து வெளியிட்டார் இக்காப்பியத்தின் கவிதைச் சுவையும், இலக்கியச் சிறப்பும் காண வேண்டுமாயின், இந்த ஆங்கிலப் பெயர்ப்பைப் பயின்றால் போதும் என்பது ஆய்வாளர்களின் கருத்து ஜே சி தத் என்பாரும் இதனை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

காதைப் பகுதிகளின் சுருக்கம்

ராஜ தரங்கிணி எனும் இந்தக் காப்பியத்தைத் தொடங்குமுன் ஐம்பதுக்கு மேற்பட்ட காஷ்மீர் மன்னர்களின் வரலாற்றை வேறு

யாரும் எழுதவில்லை அதிலும் அசோகர் காலத்துக்கு முன் காஷ்மீரில் நிகழ்ந்த அரசியல் போக்கு. நிலைமை பற்றியும் தெளிவாகத் தெரிந் திலது. இருப்பினும் நீலமதபுராணம் தருகின்ற செய்திகளை ஆதார மாகக் கொண்டால் கோனாண்டர், தாமோதர், யாசோவதி ஆகி யோரின் ஆட்சிக் காலங்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள லாம். அவர்களுக்குப் பின்னர் காஷ்மீரை ஆண்ட லவன், குசன், சுரேந்திரன், சுவர்ணன் போன்றோர் நூற்றுக் கணக்கான வேத விற்பன்னர்களுக்கு பற்பல கிராமங்களைப் பரிசாக அளித்தனர். இவர்களுக்குப் பின்னர் வந்த அசோகரோ புத்தமதத்தைத் தழுவிய தோடன்றி ஸ்ரீநகரி எனும் பட்டணத்தை ஏற்படுத்தி பற்பல இடங் களில் புத்த விகாரங்களைக் கட்டினார். அவருக்குப் பின் வந்த அவரது மகனான ஜலாலுகா காஷ்மீரப் பள்ளத்தாக்கின் பற்பல பகுதிகளை மிலேச்சர்களிடமிருந்து மீட்டு நாட்டின் எல்லைப் பகுதி களை வலிவு படுத்தினார். புத்தமதச் சார்புடைய மன்னர்களின் மறைவுக்குப் பின்னர் வந்த அபிமன்யு இந்து மதப் பற்றினர். வட மொழியின் நீதி நூலான மகா பாஷ்யத்தைக் காஷ்மீரில் பரப்பினார். தொடர்ந்து வந்த மன்னர் பரம்பரையில் மிகிரகுலன் என்பார் இரக் கமற்றவர். ஆயினும் சிவாலயம் ஒன்றை நிறுவக் காரணமாயிருந்தவர் கோகர்ணர் போன்ற பிற்கால அரசர்களும் சிவாலயங்களையும் அறச்சாலைகளையும் நாடு முழுதும் ஏற்படுத்தினர் காஷ்மீர சைவம் என்று ஒரு தனிப்பிரிவு இந்து மதத்துக்குள்ளேயே ஏற்படுதற்கு இவரெல்லாம் ஆதாரமாக இருந்தனர்.

பிரதாப ஆதித்யன் காலத்தில் காஷ்மீரில் பெருமளவு உள் நாட்டுச் சண்டை நிகழ்ந்தது அதனைத் தொடர்ந்து நாட்டில் பெரும் பஞ்சம் நிலவிற்று ஜயேந்திரர், சாந்திமதி ஆர்யராஜா போன்றோர் மேலும் பல சிவாலயங்களைக் கட்டினார். இவருள் சாந்திமதியினை மக்கள் விருப்பவில்லை. நாட்டு மக்கள் என்னை விரும்பாத போது நான் மன்னனாக இருப்பதில் பொருளில்லை என்று கூறி சாந்திமதி தனது பதவியினைத் உதறிவிட்டுத் துறவி யாகவே வாழ்ந்தவர்.

மேகவாகனன் எனும் பேரரசர் வீரம் பொருந்தியவர். கடவுட் பற்று மிகுந்தவர். உயிர்வதையினைத் தடைசெய்தார். புத்தவிகாரங் களைக் கட்டுவித்தார். இவருடைய மூன்றாவது தலைமுறையாக வந்த ஹிரண்யாவின் சகோதரர் தனது பெயரில் நாணயங்களை

அச்சிட்டு வெளியிட்டார். இவருக்குக் குழந்தைப் பேறு இல்லாமல் போகவே, இவரது மறைவுக்குப் பிறகு அரசுப் பொறுப்பினை ஏற்க வாரிசு இல்லை. அப்போது உச்சயினியை ஆண்டு வந்த விக்ரமாதித்ய மன்னர் மாத்ரகுப்தா என்பாரை நியமிக்கிறார். உச்சயினி மன்னரின் மறைவுக்குப் பின்னர் இவரது ஆளுகை நீடிக்க வில்லை. கார்கோடக வமிசாவளியைச் சார்ந்த துர்லபவரத்தனா ஏறத்தாழ முப்பது ஆண்டு கள் ஆட்சி நடத்துகிறார் இந்த வம்சத்தைச் சார்ந்த லலிதாத்ய முக்தி பாதர் மிகுந்த செல்வாக்குடன் இருந்தார். காஷ்மீரத்தின் அண்டை நாடுகளையும் மாளவம், கன்யாகுப்ஜம் போன்ற பகுதிகளையும் வென்றவர். தனது வெற்றியை நிலை நாட்டுவதற்கு திக்விஜயம் செய்தவர். தான் இந்துவாக இருந்தாலும் புத்த மதக் கொள்கை களை ஆதரித்ததோடன்றி புத்த ஸ்தூபிகளையும், விகாரங்களையும் கட்டியவர். இவருக்குப் பின் அரசியல் ஒரு நிச்சயமில்லாத நிலைமை நீடித்தாலும், தனது முன்னோரது செல்வாக்கை நிலை நாட்டியவர் ஜயபீடர். இவரது திக்விஜயத்தைப் பயன்படுத்தி இவரது மைத்துனர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். அவரைக் கைது செய்து மீண்டும் பதவிக்கு வந்தார்

அவந்தி வர்மன் காலத்தில் வைணவம் காஷ்மீரத்தில் நிலவி யது, இவரது மறைவுக்குப்பின் இவரது குமாரன் சங்கார வர்மன் தந்தையின் காலத்தில் இழந்த பற்பல பகுதிகளை மீட்டார். இவருக்குப்பின் இவரது மனைவி சுகந்தாவின் ஆட்சியில் குழப்பங் கள் நிகழ்ந்தன தொடர்ந்து ஆட்சிக்கு வந்த யாராலும் நீடித்து ஆட்சி செய்ய முடியவில்லை ஒரு சமயம் வேத பிராமணர்கள் கூடிய சபையில் முடிவு செய்தபடி சுகந்தாவின் ஆசை நாயகனாக இருந்த பிரபாகரதேவனின் குமாரர் யட்சாசகர் அரியணை ஏறினார்.

யட்சாசகரின் ஒன்பதாண்டு கால ஆட்சியில் நீதியும் நேர்மை யும் செழித்தோங்கின. இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அமைச்சர் பர்வகுப்தர் நீண்டகாலம் வாழவில்லை பின்னர் ஆட்சிக்கு வந்த திட்டா எனும் ராணியார் மாயமந்திரங்களில் நம்பிக்கை உடையராக இருந்தார் கடுமையான சட்ட திட்டங்களைப் போட்டு இருபத்தி மூன்று ஆண்டுகள் நெருக்கடி நிலையிலேயே நாட்டை அடக்கியாண்டு வந்தார். சங்கிரமராஜா என்பார் அவரது மருமான். திறமையற்றவர். இவரது ஆட்சியில் காஷ்மீர் பின் வடபகுதியில் குழப்பங்கள் நிகழ்ந் தன. இவரது மகன் ஆட்சிக்கு வந்தபோது இருபத்திரண்டு நாட்களே பதவியில் நீடிக்க முடிந்தது. (தொடரும்)

(1) நூல் மதிப்புரை

நூல் — **அன்புள்ள உனக்கு**
(கவிதை)

ஆசிரியர் — இரா. ஆனந்தி
வெளியீடு — நர்மதா பதிப்பகம்
தி. நகர், சென்னை — 17.
விலை — எட்டு ரூபாய்.

அரிதின் முயன்று பிறப்பெடுக்கும்
அற்றை நாட் பாடலே கவிதையாகவும்
உரைநடைச் சொற்களை ஒன்றாய் அடுக்கிப்
போகிற போக்கில் புனைவதாகிய
புதுக்கவிதையைப் புறத்தே தள்ளுவன்!
ஆனந்தி ஈந்த உரையின் வீச்சோ
விருப்பொடு பயின்று விதந்து பார்த்திடில்
அனைத்தும் சுவையோடு அமைந்திலவாயினும்
விரைந்து வா — தூங்காதே
விழிகள் கலந்து உறவிடும் மௌனம்
கனவெனப் பொலியும் சாம்ராச்சியம்
நாட்டின் ஒருமை நவிலும் பகுதி
கடைசியில் ஒளிரும் கவிதை உள்ளிட்ட
அனைத்தும் என்னை ஆட்படுத்தியவை!
மொழியினை ஆளும் முழு உரிமையும்
படைப்போன் விழையும் பாங்கில் எனினும்
தாறுமாறாய் அவன்தான் போயின்
தட்டிக் கேட்பது பயில் (வே) வான் உரிமை!
இருளுக்குப் பன்மை தரல் மொழிமரபில்லை.
பூக்களோ மலராமல் — புஷ்பிக்கின்றன.
கையாள — பயனுற காத்திருக்கும் போதே
பிரயோகி — உள்நுழைந்த பேதம் புரிந்திலது!
மொழியின் தூய்மை சொற்கள் பேசும்.
கருத்திணைச் சுட்டச் சொற்கள் இலையெனின்
இரவல் பெறுவது ஏற்புடைத்தாகும்.
அழகிய சொற்கள் அருகேயிருந்தும்
பிறமொழிச் சொற்களை பேணி வளர்ப்பது
கனிகளிருப்பக் காயை கவர்வது!
இயற்கை நயந்து மொழிதனைப் பேணி
நாட்டுப் பற்றை நனியும் வளர்த்திட
முகிழ்க்கும் கவிதையை மேலும் ஈந்திட
இருகை கூப்பி இறைஞ்சி வாழ்த்துவன்!
அழகிய அட்டையும் தெளிவுறு அச்சும்
இடையிடைத் தோன்றும் எழிலும் ஒளியும்
நர்மதா பதிப்பின் நலந்தனைப் பேசும்!

— அசாமி.

மலையாளத் தூது நூல்களும் அவற்றின் அமைப்பும்

டாக்டர் நா. ஈஸ்வரபிள்ளை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகையுள் தூது இலக்கிய வகை இன்றியமையா அங்கம் வகித்துத் தமிழ் மொழியின் வளத்தை மேம்படுத்துகின்றது. தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றிலேயே தூது பற்றிய குறிப்புக்களும் செய்திகளும் காணப்படுகின்றன. எனினும், தூது என்ற இலக்கியவகை முதன் முதலில் தோன்றியது கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலேயே ஆகும் இப்பெருமைக்குரியது உமாபதி சிவாச்சாரியாரின் 'நெஞ்சு விடு தூது' என்னும் நூலாகும். இத்தூது இலக்கிய வகையின் பல்வேறு சிறப்புக்களுள் ஒன்று. இவ்விலக்கிய வகை தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளிலும் காணப்பெறும் பொதுப் பண்பு ஆகும்.

தூது என்ற இலக்கிய வகைக்கு முதன் முதலில் தனியொரு வடிவம் தந்த பெருமை காளிதாசரின் மேகதூதத்தைச் சாரும். இந் நூலைத் தொடர்ந்து 150-க்கும் மேற்பட்ட தூது நூல்கள் தோன்றியுள்ளன. இதைப் போன்று தெலுங்கில் மேக சந்தேசம், மொயலு ராய பாரமு, கீர சந்தேசம், சக்கரவாக சந்தேசம், சகோர சந்தேசம், கப்பிலமு (வேல, வால் விடு தூது போன்ற நூல்களும், கன்னட மொழியில் மேகதூதம், மேக சந்தேசம் போன்ற நூல்களும் காணப் பெறுகின்றன இதனையொத்து மலையாள மொழியிலும் பல தூது நூல்கள் இடம்பெறுகின்றன. அவற்றின் தோற்றத்தையும் அமைப்பையும் சுருக்கமாக இவண் காணலாம்.

மலையாள இலக்கிய வரலாற்றைத் தொன்மைக் காலம், நவீன காலம், மிக நெருங்கிய காலம் (இக்காலம்) என இலக்கிய வரலாற்றாசிரியர் பகுப்பர் கி.பி. 10 முதல் 15 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் முதற் காலகட்டம் ஆகும் இதனை முதல் தசை எனக் குறிப்பிடுவர், இக்காலத்தில் பாடலாகவும், மணிப்பிரவாள

நடையிலும் ஏராளமான நூல்கள் தோன்றின. ஆங்கில இலக்கியச் செல்வாக்குத் தெளிவாகப் புலப்படத் தொடங்கிய காலகட்டத்தையே இக்காலம் என்ற பகுப்பின் தொடக்கமாகக் கொள்ளுவர். இக்காலப் பகுதியில் தான் சிறு காப்பியங்கள், பாவ கீதங்கள், உணர்ச்சிப் பாடல்கள் முதலான கவிதை வகைகளும் நாவல், சிறு கதை, நாடகம் இலக்கியத் திறனாய்வு போன்ற துறைகளும் தோன்றி வளர்ந்தன. மலையாள இலக்கிய வரலாற்றில் மணிப் பிரவாள காலம் சிறப்பிடம் வகிக்கின்றது. இக்காலப் பகுதியைப் பழைய மணிப்பிரவாள காலம், புதிய மணிப்பிரவாள காலம் என்றும் வகைசெய்வர். ''லீலாதிலகம்'' என்ற நூல் மணிப் பிரவாள இலக்கியத்தின் மேம்பட்ட நிலையை நமக்குக் காட்டுகின்றது மணிப்பிரவாள இலக்கிய வகைகளாகக் கடவுள் தோத்திரப் பாடல்கள், அரசர்களின் மெய்கீர்த்திகள், தல புராணங்கள், நாயகியரைப் பற்றிய வருணனைகள், தூது நூல்கள் திருவிழா வருணனைகள் முதலியன இடம் பெற்றமை தெரிய வருகின்றது.

லீலாதிலக ஆசிரியர் பல தூது நூல்களை மேற்கோள் காட்டியுள்ளார். எனவே, லீலா திலகக் காலத்திற்கு முன்பே மலையாள மொழியில் தூது நூல்கள் தோற்றம் பெற்றமை விளங்கும். மேலும் கேரளக் கவிஞர்கள் வடமொழியில் தூது நூல்கள் பல எழுதியுள்ளனர்

இப்பொழுது மலையாள மொழியில் கிடைக்கப் பெறும் முதல் தூது நூல் 'உண்ணு நீலி சந்தேசம்' ஆகும். இதன் காலம் கி. பி 14 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்பெறுகின்றது மேக தூதத்தின் கற்பனை விரிவும், நுணுக்கமான கவிதை உணர்ச்சியும், உணர்ச்சி-களை வெளிப்படுத்தும் ஆற்றலும் உண்ணு நீலி சந்தேசத்தில் காண முடியாதெனினும், கலையழகு, சுவைநிறைவு, யாப்பின் செழுமை ஆகியவற்றில் மற்றெந்த நூலுக்கும் அது ஈடு கொடுக்கும் என்று அதன் பெருமைகள் புகழப் பெறுகின்றன. (பி கே. பரமேசுவரன் நாயர் மலையாள இலக்கிய வரலாறு, ப. 103) இந்நூலுக்குப் பின்னர் மலையாள மொழியில் குதிரை, அன்னம், கருடன், காகம், சக்கரவாகம், குயில், மயில், கிளி, பட்டுப் பூச்சி, வண்டு போன்றனவற்றைத் தூது விடுப்பதாக அமைந்த நூல்கள் பல தோன்றியுள்ளன. மலையாள தூது இலக்கிய வளர்ச்சிக்கு வட மொழித் தூது நூல்களின் மொழிபெயர்ப்பு நூல்களும் பெரிதும் உதவின

மலையாள சந்தேச காவியங்களை மேல் நாட்டு இலக்கிய வகையான உணர்ச்சிக்கவிதைகள் (Lyrics) என்ற வகையுள் அடக்

குவர். சந்தேச காவியத்தில் பாவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பெறுகின்றமையால் இதனைப் ''பாவ காவியம்'' என்றும் வகை செய்வர். மேலும் சிலர் பாவனை, விகாரம், அன்பின் விரக்தி என்ற நிலைகளால் தூது நூல்களை 'ரொமேன்டிக் கவிதைகள்' என்றும் அழைப்பர்.

தர்மகுப்தன் என்பவர் சந்தோச காவியங்களின் அமைப்பைத் 1. தலைவனைப் பற்றிய வருணனைகள் 2. தலைவன் தூதனைக் காணுதல் தன் நிலையைக் கூறுதல், தலைவியின் வீடு வரையிலும் சென்று வர வேண்டுதல், 3. தலைவி இருக்குமிடத்தின் வழி வருணனை, 4. தலைவியின் இட வருணனை 5. தலைவியின் வீட்டை அறியும் அடையாளம் கூறுதல், 6. தலைவியின் தோற்ற வருணனை, 7. தலைவியின் அழகு, தோற்ற மாறுபாடு, 8 தலைவியின் பிரிவால் உறக்கமின்றி வாடும் தலைவனின் நிலை, 9. தூதுச் செய்தி கூறுதற்கேற்ற சமயம் கூறுதல் 10. தூதன் தலைவியிடம் சென்று, தூதுச் செய்தி கூறுதல் 11. தலைவன் பற்றிய அடையாளங்களைத் தூதன் தலைவியிடம் கூறுதல், 12. நூல் முடிபு என 12 பகுதியுள் அடக்கிக் காட்டுவார்.

மலையாளத் தூது நூல்களை நாம் 1. தலைவன் தலைவியிடம் தூது அனுப்புதல் 2. தலைவி தலைவனிடம் தூது அனுப்புதல் 3. ஆடவர் ஒருவர் இன்னொரு ஆடவருக்குத் தூது அனுப்புதல் 4. ஒரு பெண் இன்னொரு பெண்ணிற்குத் தூது அனுப்புதல் என்ற நான்கு பகுப்பினுள் அடக்கலாம். மலையாளத் தூது நூல்கள் பெரும் பான்மையும் ''பூர்வ பாகம்'', ''உத்திரபாகம்'' என்ற இரு பகுப்புக் களைக் கொண்டு விளங்குகின்றன. இந்திந்திர சந்தேசம் என்ற நூல் மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது. ஈண்டு சுட்டுதற்குரியது ஆகும்.

தூது நூலின் முற்பகுதியில் தூது அனுப்பப் பெறுவதன் காரணமும் சூழலும் விளக்கப் பெறுகின்றன. காதற் பிரிவு, பிரிவுத் துன்பம், நோய்வாய்ப்படுதல் மனக் கருத்தை வெளியிடும் எண்ணம், நலம் வினாதல் போன்றவை தூது விடுதலின் நோக்கங்களாக அமைகின்றன.

இதனை அடுத்து இடம் பெறுவது தூது அனுப்புவோர் தூதுப் பொருளை அல்லது தூதனைக் காணும் நிகழ்ச்சி ஆகும். கோவிலுக்குச் செல்லும் பொழுதோ, வெளியில் உலாவச் செல்லும் பொழுதோ,

கனவிலோ, தனியாக இருக்கும் பொழுதோ தூது விடுவோர் தூதுப் பொருளைக் காணும் சூழல் விளக்கப்படுகிறது. இவ்வாறு தூதுப் பொருளைக் கண்ணுற்ற போது அதனிடம் தனக்காக இன்னாரிடம் சென்று தூது கூற வேண்டும் என வேண்டும் பகுதி அடுத்து இடம் பெறுகின்றது.

மலையாளத் தூது நூல்களுக்குரிய தனிச்சிறப்புக்களுள் ஒன்றாகத் தூது பெறுவோர் இருக்கும் இடத்தை அறிவிக்கும் போது விளக்கப் பெறும் வழி வருணனையைக் குறிப்பிடலாம். நூலின் பெரும்பகுதியும் இவ்வழி வருணனையே காணப்பெறுகிறது. புலவர்களின் கற்பனை நயத்துக்கும், வருணனைச் சிறப்புக்கும், வரலாற்று பூமிநூல், இலக்கியப் புலமைக்கும் இப்பகுதி உரைகல்லாக அமைகின்றது. தூது விடுவோர் இருக்கும் இடம் முதல் தூது பெறுவோர் இருக்கும் இடம் வரையுள்ள முக்கியமான நகரங்கள், கோயில்கள் அங்காடிகள், சந்தைகள் மலைகள், ஆறுகள் போன்றவை பற்றிய வருணனைகளும் அவற்றின் சிறப்புக்களும் விளக்கப்பெறும். வழி வருணனையின் போது தூதன் இன்னின்ன வழிகளில் செல்ல வேண்டும், இன்னின்ன செய்யவேண்டும், இன்னின செய்யக்கூடாது 'எவ்வாறு பயணம் மேற்கொள்ள வேண்டும், பயண தூரம், தேவையான நாட்கள் உணவருந்தும் இடங்கள், இளைப்பாறும் இடங்கள் போன்றவை சுட்டப் பெறும் இத்துடன் முதற்பாகமாகிய பூர்வபாகம் முடிவு பெறும்.

உத்தரபாகம் தூது பெறுவோர் இருக்கும் இட வருணனையுடன் ஆரம்பமாகிறது. தூது பெறுவோர் இருக்கும் இடம், அதன் பெருமைகள்; அவண் காண்டற்குரிய சிறப்புக்கள் என்பனவும் அவ்விடத்தை அறிதற்குறிய அடையாளங்களும் வருணிக்கப் பெறும். தூது பெறுவோர் இருக்கும் இடத்தைக் கூறி, அங்கு எப்படி செல்ல வேண்டும், எவ்வளவு தூரம் செல்ல வேண்டும், வீட்டின் பக்கத்தில் எவையெவை காணப்பெறும் என்பன இப்பகுதியுள் இடம் பெறும்.

காதல் காரணமாக ஆடவர் தூது அனுப்புவதாக அமைந்த நூல்களில் தலைவியின் விரக நிலை, பிரிவுத்துயர், அழகு குலைந்த நிலை, தோற்ற மாறுபாடு, உறக்கமற்ற நிலை, கனவு கண்டு மகிழ்தல் போன்றவை விளக்கப் பெறும்.

பின்னர்த் தூது பெறுவோரிடம் கூறவேண்டிய தூதுச் செய்திகள் விளம்பப் பெறும். தூது பெறுவோரை இன்னின்ன சமயங்களிலேயே இவ்வாறு காணவேண்டும். முதலில் கூற வேண்டியவை எவை தூது பெறுவோர் மனம் மகிழத்தக்க ஆறுதல் மொழிகள், தூது விடுப்பதன் காரணம், தூது அனுப்புவோர் நிலை என்பன சுட்டப் பெறும். தூதன் சொன்னவை உண்மையானவை, தூதன் நம்பத் தக்கவனே எனத் தூது பெறுவோர் உறுதியாக எண்ணத்தக்க வகையில் தலைவன் பற்றிய அல்லது முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி பற்றிய ஒன்று அடையாளமாகக் கூறி அனுப்பப் பெறும். இதனை 'அடையாள வாக்கியம் என்பர்.

இத்தனையும் கூறித் தூதுபோய் வா எனத் தூதனை வேண்டுதல், தூது கூறி மீண்டும் வந்து பதிலுடன் தன்னைக் காண வேண்டுதல், தூதனை ஆசி கூறி அனுப்புதல், தூதன் பதில் கூறுதல் என்பனவற்றுள் ஏதேனும் ஒன்று நூல் முடிவாக அமைதலைக் காணலாம். சில நூல்களில் வாழ்த்துப் பாடல் இடம்பெறும் அமைப்பையும் காண முடிகின்றது.

முற்கூறியவாறு மலையாள மொழியில் சந்தேச காவியங்கள் எனப்பெறும் தூது நூல்கள் கற்போர் மனம் மகிழும் வண்ணம் அமைந்துள்ளன. இத்தகைய நூல்கள் பற்றிய அறிவு தமிழ்த் தூது நூல்களுடன் ஒப்பிட்டு ஆராயும் ஒப்பாய்வுக்கும் தூது இலக்கிய வகையின் பொதுப் பண்புகளையும் ஒவ்வொரு மொழி நூல்களுக்குரிய சிறப்புப் பண்புகளையும் தெளிவதற்கும் துணை செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

துணை நின்ற நூல்கள்

ஈஸ்வர பிள்ளை நா. தமிழில் தூது இலக்கியங்கள். (வெளியிடப் பெறாத ஆய்வேடு) கேரளப் பல்கலைக் கழகம்.

அப்புக் குட்டன் நாயர், சம்பங்குளம் மலையாள சந்தேச காவியங்கள் (மலையாள நூல்) நேஷனல் புக் ஸ்டால். கோட்டயம், 1979.

வரலாற்று நிகழ்ச்சி

சிங்கம்பட்டி ஜமீன் தூக்குத் துரை

நாட்டு விடுதலைக்குப் பின்னர் ஐந்நூறுக்கு மேற்பட்ட ராஜாக்களும், ஜமீன்தார்களும் இந்தியப் பெருநிலத்தோடு தங்களை ஐக்கியப் படுத்திக் கொள்ள நேரிட்டது. இதனால் ஆடம்பரமாக வாழ்ந்த பேரரசர்கள் போதிய வருவாய் இன்றி தாங்கள் வசித்த அரண்மனைகளை உணவு விடுதிகளாக மாற்றிக் கொண்டுள்ளனர். சிற்சிலர் அரசியல் வாதிகளாக மாறியுள்ளனர். இந்த நிலையில் நெல்லை மாவட்டத்தில் மணிமுத்தாறு அணைப்பகுதியில் இருக்கும் முன்னாளைய சிங்கம்பட்டி ஜமீன் சீர்குலைந்து நிற்பதில் வியப்பொன்றுமில்லை ஆயினும் இன்னாளைய முன்னாள் ஜமீன்தார் முருகதாஸ் தீர்த்தபதியிடம் காணப்பெறும் அசாதரணமான பெருந்தன்மையும், பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காத இயல்பும் நேர்மையும் நம்மைப் பெரிதும் மகிழ்விக்கின்றன. பெருங்காயம் இருந்த பாண்டம் அல்லவா! திருவாளர் முருகதாஸ் தீர்த்தபதி அந்நாட்களில் ஏற்காட்டில் ஆங்கிலேயரிடம் கல்விபயின்றவர் அழகாக ஆங்கிலம் பேசுகிறார். தனது மக்கட்செல்வங்களை முறைப்படி மணம் புரிவித்த பின்னர் பழைய அரண்மனையின் ஒரு பக்கத்தில் துறவி போல வாழ்ந்து கொண்டு தன்னால் இயன்ற பொதுப்பணியும் செய்து வருகிறார் - எந்தவிதப் பலனையும் எதிர்பாராமல், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரிக் குழுவின் நிரந்தர உறுப்பினர். கொள்கை ரீதியான வேறுபாட்டில் குழுத்தலைவரோடு முரண்பாடு ஏற்பட்டபோது உறுப்பினர் பதவியை உதறி எறிந்தார். அப்பழுக்கில்லாது. அவர் புரியும் பொதுத் தொண்டின் தூய்மை உணர்ந்து குழுத்தலைவரே நேரில் வந்து பின்னர் சமாதானம் செய்ய, மீண்டும் உறுப்பினர் பதவி நீடிக்கிறது. கொள்கை வீரராகவும் குணக் குன்றாகவும் திகழும் இவர் கடவுட் கொள்கையில் ஆழ்ந்த பற்றுடையவர். தேவார திருவாசகங்களில் இவருக்கு இருக்கும் ஈடுபாட்டுக்கு அண்மையில் விக்கிரமசிங்கபுரத்தில் சைவசித்தாந்த மாநாட்டில் இவர் ஆற்றிய உரையே சான்று. குற்றாலத்தில் இவரது உரையினைக் கேட்ட மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர் மனமுவந்து பாராட்டியதனை இவர் நினைவு கூர்ந்து மகிழ்கிறார்.

அண்மையில் மணிமுத்தாறில் மாவட்ட காவல் துறை அதிகாரி அருமைச்சகோதரர் சண்முகநாதன் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்த போது சிங்கம்பட்டி ஜமீன்தார் முருகதாஸ் தீர்த்தபதியைக் கண்டு உரையாடும் வாய்ப்புக் கிட்டியது. அந்நாளைய ஜமீன்தார்களின் அழகான திருவோலக்க மண்டபத்தின் அருகிலேயே ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் வெளித்திண்ணையில் அமர்ந்து என்னை வரவேற்றார். மண்டபமும், கட்டிடமும் உயிரை வைத்துக் கொண்டிருக்கின்றனவே தவிர அவற்றில் ஊட்டமில்லை. தொல்பொருள் சின்னங்களாகத்தான் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய ஜமீன்தார் அந்தக் குடும்பத்தின் முப்பத்தொன்றாவது வாரிசு. தன்னோடு வாரிசுத் தன்மையும் போய்விடும் என்று ஏக்கங் கலந்த பெருமூச்சு விடுகிறார். உரையாடலின் இடையிலேயே திடீ-ரென்று என்னை அக்கட்டிடத்தின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார். கிராமத்தைச் சுற்றிலும் நெல் வயல்கள். பன்னீர் போன்ற சாரலைப் பளிங்கு நீராய்த் தெளிக்கும் பாபநாசம் குன்றுகள் தூரத்தே தெரிகின்றன. தொலை நோக்கியைக் கொடுத்து மலையடி-வாரத்தின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டினார். அந்த இடம் தான் தூக்குத்துரை வயல் என்று இப்போதும் வழங்கப் பெறுகின்றது. அந்த நிலத்துக்கு அப்பெயர் வரக் காரணமான நிகழ்ச்சியே வரலாற்றில் இடம் பெறத்தக்கதாகும்.

1831 - ஆம் ஆண்டு அதுவரை நிர்வகித்து வந்த தனது பெரிய தந்தையாரின் மனைவியிடமிருந்து ஜமீனை மீட்டுத் - தனது ஆளுகைக்குக் கொண்டு வருகிறார் பெரியசாமித்தேவர். மணமாகாத இளைஞர். சிலம்பம், களரி மல்யுத்தம் போன்ற அந்நாளைய போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர். அநீதியைப் பொறுக்காத இப்பேராண்மையாளர் அன்புக்கு அடிமையாகும் இயல்புடையார். கொண்டயங்கோட்டை மறவர் குலத்தைச்சார்ந்த ராமசாமித்தேவர் என்பார் பல்வேறு கொலைக்குற்றங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். யாருக்கும் தலைவணங்காத போக்கு, தன்பால் நிகழ்த்தப்பெறும் எப்பிழையினையும் பொறுத்துக் கொள்ளமுடியாத இயல்பு, மனோரவேகத்தோடு கட்டுக்கடங்காத உடல்வன்மை இவற்றின் ஒட்டுமொத்தமாக விளங்கிய மறவர் குலத்தலைவர்கள் பலர் வெள்ளையரின் கண்களில் விரோதிகளாகத் தோன்றியதில் வியப்பில்லை அல்லவா! காடுகளும், குன்றுகளும் நிறைந்த பகுதிகளில் அவர்களைப் பிடிப்பதும் கைது செய்வதும் அவ்வளவு எளிதான செயல் அல்லவே! எப்படியோ ஒரு முறை ராமசாமித்தேவர் மீண்டும் கைது செய்யப்பட்டு மதுரைச்

சிறைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். பல்வேறு வழக்குகளின் அடிப் படையில் அரசாங்கமும் சட்டமும் அவரது வாழ்வின் இறுதி நாளையும் குறிப்பிட்டு விட்டன. இயன்றால் கை கொடுத்து உதவுங்கள் என்ற செய்தி, மட்டும் சிறையிலிருந்த ராமசாமியிடமிருந்து சிங்கம்பட்டிக்கு வருகியது.

அன்புக்கே அடிமையான சிங்கம்பட்டி ஜமீன்தாரும் எப்படியும் தனது நண்பனைச் சிறையிலிருந்து மீட்டுவிட எண்ணி மெய்க் காவலர் சிலருடன் மதுரைக்குப்புறப்பட்டு விட்டார். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தொலைதூரம் செல்லுதற்குக் குதிரைச் சவாரியும் பல்லக்கும் தான் போக்குவரத்துச் சாதனங்கள் வழியில் அம்பாசமுத்திரத்துக்கு அருகில் புதுக்குடியில் மகோன்னதமான வரவேற்புக்குப் பின் ஓரிரவு தங்க நேரிட்டது அங்கு சகோதரர் எழுவர் உள்ள ஒரு குடும்பத்தில் இருந்த ஒரே ஒரு மங்கையை இரவில் உணவு பரிமாறச் செய்கிறார்கள். ஜமீன்தாரும் மதுரையிலிருந்து பணி முடித்து வந்ததும் அவளைத் திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று கூறி விடை பெறுகிறார். இதனையே ஆதாரமாகக் கொண்டு சிங்கம்பட்டி ஜமீனின் ஆளுகை சிற்சில ஆண்டுகள் அக்குடும்பத்தின ரிடம் சென்றதும் பின்னர் மீட்கப்பட்டதும் தனியொரு கதையாகும்.

மதுரையை வந்தடைந்த சிங்கம்பட்டி ஜமீன்தார் மறுநாள் வடநாட்டு சேட் மாதிரித் தோற்றமளித்தார். மதுரைச் சிறையின் பாதுகாவலனாக இருந்த நன்னு சாகிபை நண்பனாக்கிக் கொள்ளு வதற்கு அவர் கையாண்ட வழி அது. பட்டாணி முஸ்லீம் நன்னு சாகிபு புதிதாக வந்திருந்த சேட்ஜிக்கு நெருங்கிய நண்பர் எனவே சிறைக்குச் செல்வதிலோ திரும்பி வருவதிலோ மாறுவேடத்திலிருந்த ஜமீன்தாருக்கு எத்தகு சிக்கலும் ஏற்படவில்லை. என்றாலும் அந்த நட்பினால் ஏற்பட்ட ஒரு இறுதிமுடிவினை இருவருமே எதிர்பார்க்க வில்லை.

சேட்டும் நன்னுசாகிபும் ஒரு நாள் வைகையாற்று மணலில் அமர்ந்து மனம் விட்டுப்பேசிக் கொண்டிருந்தார்கள். சூரியன் மறைந்து லேசாக இருள் பரவிக் கொண்டிருக்கிற நேரம சிறையில் இருக்கிற ராமசாமித்தேவர் தூக்கிலிடப்படுதற்கு ஓரிரண்டு நாட்களே இருந்தன. மேலும் காலந்தாழ்த்திப் பயனில்லை. எனவே சிங்கம்பட்டி ஜமீன்தார் தனது மாறுவேட உண்மையினை வெளிப்படுத்தியதோடு நண்பன் ராமசாமியையும் சிறையிலிருந்து விடுவிக்கக் கேட்டுக் கொண்டார்.

எத்துணைப் பொன்னும் பொருளும் தருவதாகக் கூறினார். சற்றே அதிர்ச்சி அடைந்த நன்னுசாகிபோ எதற்கும் ஒத்துக் கொள்ள வில்லை. ஜமீன்தாருக்கும் வேறு வழியில்லை. வந்த காரியமும் கை கூட வில்லை. தன்னுடைய திட்டத்தை வெளியிட்டதால் தனக்கே ஆபத்து வருமோ என்ற அச்சம். சாமபேத தானம் பொய்த்துப் போகவே தண்டத்தில் இறங்கி விட்டார். சிறைப் பாதுகாவலனாக இருந்த பட்டாணியனை கைகலப்பில் அடித்து வீழ்த்திக் கொன்று விட்டார். திட்டமிடப் படாத கொலையெனவே அவசா அவசரமாகத் தமது குதிரைச் சேணத்தோடு பிணத்தைக் கட்டி வைகை மணலில் புதைத்து விட்டார். அவனிடமிருந்து கைப்பற்றிய சாவி நண்பனைச் சிறை மீட்க உதவியது. உடனடியாக வெற்றிதான். பின் விளைவோ பெரும் பாதகத்தில் முடிந்து விட்டது.

ஆற்று மணலில் ஆழப் புதைக்கப்படாது நாற்றமெடுத்துப் போன நன்னு சாகிபின் சடலத்தை நாய்கள் இழுத்து வெளியில் போட்டு விட்டன. சேணத்திலிருந்த சிங்கம்பட்டி ஜமீனின் சின்னம் ஜமீன்தாரைக் காட்டிக் கொடுத்து விட்டது. ஜமீன்தார் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப் படுகிறார். அரசாங்கம் தூக்கிலிட முடிவு செய்கிறது. அப்போது ஜமீன்தாருக்கு வயது இருபத்தேழு மணமாகாத இளைஞனைத் தூக்கிலிட்டால், ஜமீனுக்கு வாரிசு இல்லாமல் போய்விடும். தீவாந்தர தண்டனை அளித்து அந்தமானுக்கு அனுப்பலாமா என்றும் அரசு மீண்டும் ஆலோசனை செய்கிறது. இந்த யோசனை சென்னையிலிருந்து உத்தரவாகி வருதற்குள் அப்போது திருநெல்வேலி கலெக்டராக இருந்த ஜே சி. ராக்டன் ஜமீன்தாரின் கடைசி விருப்பம் என்ன என்று கேட்டான். தூக்குக்கைதிகளை அவ்வாறு கேட்பது இன்று வரை சிறைகளில் உள்ள மரபு அல்லவா!

சாவது உறுதியென்ற நிலையில் எதற்கும் அஞ்சாத மறவர் குலச்சிங்கம் பெரியசாமி ஒரு கணமும் தயங்காமல் பதிலிறுத்தார். இன்றிரவு உமது மனைவியை என்னிடம் அனுப்பு' என்பதே அந்த பதில். கடுங்கோபம் கொண்ட கலெக்டர் ஜமீன் கிராமம் சிங்கம் பட்டிக்கு மேற்கே பெரியசாமித் தேவரை பலரும் அறியப் பகிரங்கமாகத் தூக்கிலிட ஆணையிட்டான். ஆணையையும் அன்றே நிறைவேற்றினர். 1834 - ஆம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் நடந்த நிகழ்ச்சி இது. வெள்ளைக்கார கலெக்டருக்கு அத்தோடும் சினம் ஆறவில்லை. பருந்துகளுக்கும் கழுகுகளுக்கும்' இரையாகி இற்றுக்

தீமே விழும் வரையிலும் பிணத்தை யாரும் தொடக் கூடாது என்றும் உத்தரவிட்டான். எனவே மரணத்தை முத்தமிட்ட மாவீரனுக்கு இந்து மத நியதிப்படி எந்தவித சடங்குகளும் நடத்தப் பெற வில்லை. ஆயினும் அந்த மாபெரும் அஞ்சாத நெஞ்சனை அப்பகுதி மக்கள் தெய்வமாக மதித்து வழிபடுகின்றனர். சிங்கம்பட்டி ஜமீனில் 24-ஆவது பட்டத்திலிருந்த தூக்குத்துரையின் சிலைக்கும் அக்கிராமத்தில் உள்ள முருகன் கோவிலில் இன்று காறும் வழிபாடு நடத்தப் பெறுகின்றது.

—பொறுப்பாசிரியர்.

பசும்பொன் மன்றம் - தேர்வுப் பயிற்சி

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில் பசும்பொன் மன்றத்தின் சார்பில் நடத்தப் பெறும் மருத்துவ, பொறி இயற் கல்லூரி நுழைவுத் தேர்வுக்குரிய பயிற்சியின் நிறைவு விழா ஜூன் திங்கள் 18-ஆம் நாள் மிக்க சிறப்புடன் நடத்தப் பெற்றது. உயர்திரு. சர்க்கரைச் சேர்வை அவர்கள் தலைமையேற்று நடந்த இவ்விழாவில் தமிழ்ச்சங்கச் செயலர் உயர்திரு. என்.எஸ். முத்து மலைச்சாமி, டாக்டர்கள். திரு சக்திவேல், திரு. சேதுராமன், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பயிற்சியினை முன்னின்று நடத்திய ஆசிரியப் பெருமக்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப் பெற்றன. திரு. வித்வான். அ. சாமி அய்யா அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SENTAMIL

1.	Place of Publication	:	Madurai
2.	Periodicity of Publication	:	Quarterly
3.	Printer's Name	:	Alavai Printers 153 G, North Veli Street, Madurai — 1
4.	Nationality	:	Indian
5.	Address	:	K. S. Kanthaswamy 33, Patchai Natchiamman Koil Street, Madurai - 1
6.	Publisher's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L.,
7.	Nationality	:	Indian
8.	Address	:	54, Tamil Sangam Road
9.	Editors's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L.,
10.	Nationality	:	Indian
11.	Address	:	54, Tamil Sangam Road, Madurai - 1.
12.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	:	Madurai Tamil Sangam. 54, Tamil Sangam Road, Madurai - 625 001

I. N.S. Muthumalaichamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

DATED : Sd) N.S. MUTHUMALAICHAMY

25-6-1988. SIGNATURE OF PUBLISHER

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	5.00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும்உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	5-00
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை கலம்பக நூல்கள்**	12-00
	1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்	
	2. மதுரை மும்மணிக் கோவை	
	3. சிராமலைக்கோவை	
	4. கலசைக் கோவை	
	5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)	
	6 திருவருணைக் கலம்பகம்	
	7. குருமொழி வினாவிடை	
12.	**உலா நூல்கள்**	10-00
	1. திருவாரூருலா	
	2. திருச்சிறு புலியூர் உலா	
	3. விக்கிரம சோழனுலா	
	4 கடம்பர் கோவில் உலா	
	5. தேவையுலா	
	6. புலவராற்றுப்படை	
13.	**பாமாலை நூல்கள்**	12-00
	1. திருப்பணிமாலை	
	2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)	
	3. திருக்குற்றாலமாலை	
	4. திருப்புல்லாணிமாலை	
	5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)	
	6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	
	7. கலைசைச் சிலேடை வெண்பா	
	8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)	

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1 ஸ்ரீமுத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5 சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநீஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

★ ★ ★

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 8-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1

ஆலவாய் ◯ சிம்மக்கல், மதுரை.